Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 03 (25.03.2004) வியாழக்கிழமை இதழ் :176

TOSHIBA

TOSHIBA போட்டோ கொப்பியர்கள், ரோணர்கள், உதிரிப்பாகங்களையும் மற்றும் அனைத்துவிதமான கணனிகள், கணனி உதிரிப்பாகங்களையும் யாழ்.நகரிலேயே மிகக்குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஒரு நிறுவனம்.

ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த TOSHIBA உற்பத்திகளுக்கான வட இலங்கையின் ஏகமுகவர்

HS Office Automation

No. 360/3, Main Street, Jaffna. T.P No: 222 7676 / 4 590 190

- ஜனாதிபதி சந்திரிகாவுடனான தனியான சந்திப்பு -

# பகிரங்க விவாதத்தை நடத்த ஆனந்தசங்கரி முன்வருவாரா?

## சவால் விடுத்தார் மாவை



(யாழ்ப்பாணம்)

**பொய்களையும், புரட்டுகளையும் பத்திரிகை விளம்பரங்களின்மூலம் வெளியிட்டுவரும் ஆனந்த சங்கரி - இது குறித்து பகிரங்க விவாதம் நடத்தத் தயாராக இருக்கிறாரா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளரான மாவை சேனாதிராசா சவால் விடுத்துள்ளார்.**

யாழ்.நகரப்பகுதியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இந்த சவாலை விடுத்தார்.

இந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய மாவை சேனாதிராசா-

ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் அறிவிப்பை வெளியிட்ட பின்னர் ஆனந்தசங்கரி தனியாகச் சென்று அவரைச் சந்தித்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவை தனியாகச் சென்று ஆனந்தசங்கரி சந்தித்தது ஏன்? இது போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து அவருடன் பகிரங்க விவாதம் நடத்த நாம் தயாராக இருக்கிறோம். இதற்கு அவர் தயாரா? என்று அவர் கேள்வி எழுப்பினார். (111)

## கிழக்குப் பல்கலை பேராசிரியர் துப்பாக்கிச் சூட்டில் படுகாயம்!

### மட்டக்களப்பில் சம்பவம்!

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழக, விவசாய பீட உதவிப் பீடாதிபதியான பேராசிரியர் திருச்செல்வம் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது-

கிழக்குப் பல்கலைக்கழக விவசாய பீடாதிபதியான பேராசிரியர் திருச்செல்வம் கல்லடியிலுள்ள அவரது வீட்டில் வைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 8:30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது. இடுப்புக்குக் கீழே படுகாயமடைந்த இவர், (12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறைகள் தொடர்ந்து அதிகரிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற பொதுத்தேர்தல் குறித்து நேற்று காலை 6 மணிவரை முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் 53 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து நேற்று வரை 957 வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டுமொரு போர் மூளுவதை சந்திரிகா விரும்பவில்லையாம்!

### மாத்தறையில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் பேச்சு

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் போர் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. அத்துடன் நாடு பிளவுபடுவதையும் அனுமதிக்கப்போவதில்லை எனவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நேற்று மாத்தறையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-

சமூகங்களுக்கு இடையில் நிலவும் நெருக்கடிகளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைக்கும் அரசாங்கம் தீர்க்கும்.

அத்துடன்- நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு ஏற்படவேண்டுமெனில் பலமான மக்கள் ஆணையைக்கொண்ட அரசாங்கம் அமைக்கப்படவேண்டும்.

நாட்டினைக் கட்டியெழுப்பக்கூடிய திட்டங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடமே உள்ளது. எனவே மக்கள் அனைவரும் இந்த முன்னணிக்கே தமது ஆதரவினை வழங்கவேண்டும்.

முன்னணியால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ ட்ரக் வண்டி மோதி சாவகச்சேரி மாணவி காயம்!

## தபால்மூல வாக்களிப்பு நேற்று நடைபெற்றது!

(யாழ்ப்பாணம்)

# சாவகச்சேரி மாணவி காயம்!

தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சென்று கொண்டிருந்த சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவி ஒருவர், இராணுவ ட்ரக் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கச்சாய் வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில், சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த தம்பியையா வினோ (வயது 20) என்ற மாணவியே படுகாயமடைந்தவராவார்.

கச்சாய் வீதி வழியாக, தனியார் கல்வி நிறுவனத்திற்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை - பின்புறமாக வந்த இராணுவ ட்ரக் ஒன்று இவர் மீது மோதியதாகத் தெரியவருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுமியை வல்லுறவுக்கு உட்படுத்தியவருக்கு பத்து வருடகால கடூழிய சிறைத்தண்டனை!

## யாழ்.மேல்நீதிமன்றம் விதித்தது

(யாழ்ப்பாணம்)

13 வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய நபருக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனையை யாழ். மேல்நீதிமன்றம் விதித்தது.

மயிலங்காடு [illegible]க்கு - ஏழாலைப் பகுதியில் கடந்த 199[illegible] ஆம் ஆண்டு தோட்டத்திற்குச் சென்ற சி[illegible]றுமியை, அயல் தோட்டத்தில் இருந்த நபர் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என யாழ்.மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிவான் கே.பி.எஸ்.வரதராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணையின் முடிவிலேயே குற்றவாளிக்கு 10 வருட கடூழிய சிறைத் (12 ஆம் பக்கம் பார்க்க)

# நேற்று நடைபெற்றது!

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நேற்று இடம்பெற்றது.

தபால்மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்த அரச ஊழியர்கள், கடமையாற்றும் அலுவலகங்களின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் முன்னிலையில் தமது வாக்குகளை அளித்தனர்.

யாழ்.குடாநாட்டிலும் தபால்மூலம் வாக்களிக்க விண்ணப்பித்த அரச திணைக்கள ஊழியர்கள் மற்றும் படையினர் தமது வாக்குகளைச் செலுத்தியதாக உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

தபால்மூலம் வாக்களிப்பதற்கு யாழ். மாவட்டத்தில் 4029 பேர் தகுதிபெற்றிருந்தனர். இவர்களில் அநேகமானோர் தமது வாக்குகளைச் செலுத்தியதாகத் தெரியவருகிறது. (தீ)

# சிங்கள வேட்பாளர்களும் குடாநாட்டில் பிரசாரம்!

(வண்ணை)

ஜாதிக ஹெல உறுமய, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகளுக்கு ஆதரவுகோரும் சிங்கள மொழியிலான பிரசுரங்கள் நேற்றுக்காலை இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள், காவல் அரண்களுக்கு அண்மையில் வாகனத்தில் வந்தோரால் வீசப்பட்டன.

நேற்றுக்காலை யாழ்.நகரப்பகுதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள முகாம்கள், காவல் அரண்களுக்கு அருகிலேயே இந்தகைய பிரசுரங்கள் வீசப்பட்டன.

நேற்று தபால்மூலம் வாக்களிப்பு இடம்பெறவிருந்த நிலையிலேயே இந்த பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. (101)




தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்

தேச விடுதலைக் காலங்களில் நின்றவன்
தமிழர் எழுச்சியே மூச்சாகக் கொண்டவன்

சொலமன் சூசைப்பிள்ளை சிறில்

X 11

தேசத் தொண்டரைத் தெரிந்து வாக்களிக்கும் தேர்தல் இது!

கூட்டுறவாளன்




### இல்ல மெய்வல்லுனர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பெ.சுப்பிரமணியம், மாலதி சுப்பிரமணியம ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினராக நல்லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.காங்கேசன் கலந்துகொள்வார்.

யசோ இறபர் ஸ்டாம்
75/=
பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே
யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/2152)

நிறஞ்சனாஸ் சங்கானை
இன்றுமுதல்
சத்தியராஜ், ஆனந்தராஜ் நடித்த
சேனா
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00.(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
Chicken Run
(சி-2262)

ராஜா யாழ்ப்பாணம்.
இன்றும், நாளையும்
மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், லதா, மஞ்சுளா நடித்த
நேற்று இன்று நாளை
காட்சி நேரம்:-
10.30, 2.30,
6.30, 9.30
(பு.நே)

(சி-2263)

# அறிவித்தல்

**2004 ஆண்டு சனவரிமாத இலவச நிவாரண வழங்கல் சம்பந்தமாக உணவுப் பொருட்கள் பற்றிய விபரங்கள் பொதுமக்கள் நலன்கருதி கீழே தரப்பட்டுள்ளன.**

1) வேலணை, ஊர்காவற்துறை, காரைநகர், தீவகம், நெடுந்தீவு, ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் உலர் உணவுபெறும் பயனாளிகளுக்கு

| பொருட்கள் | விலை ரூபா | குடும்ப அங்கத்தவர் ரீதியான பொருட்களின் அளவு (கிலோ கிராம்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| சிவப்பு நாட்டரிசி | 30.50 | 6.425 | 11.825 | 15.975 | 19.450 | 24.025 |
| திட்டல் பச்சை அரிசி | 27.50 | 3.100 | 5.500 | 7.800 | 9.100 | 11.200 |
| சீனி | 33.87 | 1.200 | 2.250 | 3.100 | 3.700 | 5.000 |
| பருப்பு | 55.37 | 0.250 | 0.500 | 0.600 | 0.700 | 0.900 |
| ஒரு மாதத்திற்கான உரித்துடைய நிவாரணத்தின் மொத்த பெறுமதி (ரூபா) | | 336.00 | 616.00 | 840.00 | 1008.00 | 1260.00 |

2) யாழ்ப்பாணம், நல்லூர், அச்சுவேலி, நீர்வேலி, மானிப்பாய், பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, அளவெட்டி, மல்லாகம், சங்கானை, சுன்னாகம், புங்குடுதீவு, நயினாதீவு ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் உலர் உணவு பெறும் பயனாளிகளுக்கு

| பொருட்கள் | விலை ரூபா | குடும்ப அங்கத்தவர் ரீதியான பொருட்களின் அளவு (கிலோ கிராம்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| சிவப்பு நாட்டரிசி | 30.00 | 6.525 | 12.025 | 16.225 | 19.775 | 24.425 |
| திட்டல் பச்சை அரிசி | 27.50 | 3.100 | 5.500 | 7.800 | 9.100 | 11.200 |
| சீனி | 33.87 | 1.200 | 2.250 | 3.100 | 3.700 | 5.000 |
| பருப்பு | 55.37 | 0.250 | 0.500 | 0.600 | 0.700 | 0.900 |
| ஒரு மாதத்திற்கான உரித்துடைய நிவாரணத்தின் மொத்த (பெறுமதி (ரூபா) | | 336.00 | 616.00 | 840.00 | 1008.00 | 1260.00 |

3) உடுப்பிட்டி, கட்டைவேலி, நெல்லியடி, பருத்தித்துறை, புலோலி, மருதங்கேணி, சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் உணவுபெறும் பயனாளிகளுக்கு

| பொருட்கள் | விலை ரூபா | குடும்ப அங்கத்தவர் ரீதியான பொருட்களின் அளவு (கிலோ கிராம்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| சிவப்பு நாட்டரிசி | 29.00 | 6.750 | 12.425 | 16.800 | 20.450 | 25.250 |
| திட்டல் பச்சை அரிசி | 27.50 | 3.100 | 5.500 | 7.800 | 9.100 | 11.200 |
| சீனி | 33.87 | 1.200 | 2.250 | 3.100 | 3.700 | 5.000 |
| பருப்பு | 55.37 | 0.250 | 0.500 | 0.600 | 0.700 | 0.900 |
| ஒரு மாதத்திற்கான உரித்துடைய நிவாரணத்தின் மொத்த (பெறுமதி (ரூபா) | | 336.00 | 616.00 | 840.00 | 1008.00 | 1260.00 |

அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.

(சி-2342)

# விடுதலைப் புலிகள் - ஐக்கிய முன்னணி இடையில் அதிகார பூர்வமான பேச்சுக்கள் இடம்பெறவில்லை

## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குமிடையில், அதிகார பூர்வமான பேச்சுவார்த்தைகள் எவையும் இடம்பெறவில்லையென, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் - சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.



தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த விசேடபேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்-

தேர்தலில் ஈடுபடுகின்ற அனைத்துக் கட்சிகளும், மக்களுக்குப் பலவிதமான கருத்துக்களை முன்வைத்துக்கொண்டுவருகின்றன. தேர்தல் பிரகடனங்களையும் வெவ்வேறு விதமாக முன்வைத்துள்ளார்கள். தேர்தல் காலத்தில், மக்கள் மத்தியில் மேடையில் ஏறிப்பேசுகின்றபோதும், ஒவ்வொரு விதமாகவே பேசுகின்றார்கள். ஆனால், நாம் தெளிவாக இருக்கின்றோம். தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் ஏகப்பிர திநிதிகளாகவும், தமிழ் மக்களின் அபிலாஷைகள், எதிர்காலத்தில் தீர்க்கமான முறையில் முன்னெடுத்துச் செல்கின்ற கடமைப்பொறுப் பிலும் நாம் இருக்கின்றோம்.

எந்தக் கட்சியும், கூட்டமைப்பும் ஆட்சிக்கு வந்தாலும், தமிழ் மக்கள் சார்பாகவும், தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு, பேச முன்வருபவர்களுடன் நாம் பேசத் தயாராகவுள்ளோம். குறிப்பாக - தமிழ்மக்களின் அபிலாஷைகளை ஏற்றுக்கொண்டுவருகின்ற எந்த அதிகாரபீடத்துடனும், எமது சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லக் கூடியதாக இருக்கும். இந்த யதார்த்தத்தை அங்குள்ள கட்சிகள் தெளிவாக உணர்த்தியிருப்பார்களென நினைக்கின்றேன்.

சந்திரிகா தலைமையிலான கூட்டணி - சமாதானத்திற்கான ஆணை ஒன்றினைப் பிறப்பித்து, மக்களிடம் வாக்குக் கேட்டது. இதற்கமைய தமிழ் - சிங்களப் பெரும்பான்மை மக்கள் - அதற்கான ஆணையை வழங்கினார்கள். இதேபோல், ரணில் விக்கிரமசிங்கவும் சமாதானத்திற்கான ஆணையை வழங்கிய மக்களிடம் ஆதரவு கேட்டபோது, அந்த மக்கள் சமாதானத்திற்கான உறுதியான ஆணையை வழங்கியிருந்தார்கள்.

இந்த வகையில் சிங்கள தேசத்தில் வாழ்கின்ற மக்கள்கூட, அமைதியையும், சமாதானத்தையும், தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வையும் முன்வைக்கவேண்டுமென்பதில் அவர்கள் உறுதியாக உள்ளார்கள்.

ஜனாதிபதியினதும், பிரதமரினதும் உள்நோக்கங்கள் எவ்வாறு இருக்குமென, எம்மால் தற்போது கூறமுடியாது. ஆனால், இரண்டு தரப்புமே சமாதானத்தின்மீது, பற்றுக்கொண்டுள்ளதாக வெளியுலகிற்குக் காட்டுகின்றார்கள். யார் இந்தச் சமாதானத்தை முன்னெடுக்கக்கூடியவர்களென சிங்கள மக்கள் இனங்கண்டு கொள்வார்கள். அந்த அடிப்படையில் தேர்தல் பிரகடனங்களில், தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாகக் குறிப்பிடப் படவில்லை என்பது ஒரு ஏமாற்றத்தைத் தருவதொன்றாகும்.

யதார்த்த பூர்வமாகத் தமிழ் மக்களை ஏற்றுக்கொண்டு, தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டு, ஆட்சி அமைக்கக்கூடியவர்களுடன்தான் நாம் பேசமுடியும். ஜனாதிபதிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை சம்பந்தமாகத் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது என்ற கருத்து முற்றிலும் தவறானது. எம்மைப் பொறுத்தவரையில், கடந்தகாலங்களில் ஏற்பட்ட பேச்சுவார்தைகளின் அனுபவங்களைக் கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம், உறுதியான முடிவொன்றை எடுத்துள்ளது.

இனிவரும் காலங்களில் சமாதானச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லவேண்டுமென்றால், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அல்லது அனுசரணை வேண்டும் அல்லது சர்வதேச அனுசரணைவேண்டும். இந்த நிலையை புறந்தள்ளி எந்த அதிகாரக் கட்சியுடனும், எந்தச் சக்தியுடனும், தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பை வைத்திருக்க வேண்டிய தேவையில்லை. இவ்வாறு நாம் செயற்படமாட்டோம். இதில் நாம் தெளிவாகவுள்ளோம்.

நோர்வே அந்த அனுசரணையாளர்களின் ஊடாகவே, சமாதானப் பேச்சுக்களுக்கான முன்னெடுப்புக்கள் இடம்பெறும். தனிப்பட்ட ரீதியாக ஜனாதிபதியுடனும் வேறு எவருடனும் தொடர்பையேற்றபடுத்த எமது தலைமை முயற்சி எடுக்கவில்லை.

இந்தத் தேர்தல் நல்ல சந்தர்ப்பம். முன்பு ஒட்டுமொத்தமான தமிழ்மக்கள் தமது அபிலாஷைகளை வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இந்தத் தடவை ஓர் யுத்தநிறுத்தம், சமாதான சூழல் நிலவுகின்ற நிலையில் தமிழ்மக்கள் சிந்தித்து வாக்களிப்பார்கள். தேசிய பலத்தைத் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து வெளிப்படுத்துவார்கள் என்ற அச்சம் தென்னிலங்கைக்கு தற்போது ஏற்பட்டுள்ளது. உண்மையில் அது நியாயமானது.

இந்த நிலையில் கருணா ஏற்படுத்திய குழப்பம் மக்கள் மத்தியில் ஒரு சஞ்சலத்தை ஏற்படுத்தியது. ஆனால், தற்போது மக்கள் தெளிவாக உள்ளார்கள். கருணாவின் உண்மையான பக்கம் மக்களுக்குத் தற்போது தெரிந்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் நியமிக்கப்பட்ட ஒரு சிலரின் செயற்பாடு, அந்த மக்களினால் ஏற்றுக்கொள்ள் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கருணாவின் அடியாட்களின் அச்சுறுத்தல்கள் மக்கள் மத்தியில் இருப்பதனால், சுதந்திரமாக மக்கள் கருத்துக்களைக் கூறமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக - ராஜன் சத்தியமூர்த்தி என்பவரின் கருத்துகள் பிரதேசவாதத்தினை ஏற்படுத்துகின்றன.

இவர்களுக்கு எதிர்வரும் தேர்தலில் மக்கள் தமது உண்மை நிலையை எடுத்துக் காட்டுவார்கள் எனவும் அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

# 99 இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்படுவர்

(இத்தாலி)

இத்தாலியில் சட்ட விரோதமாக குடியேற முயற்சித்த 99 இலங்கையர்களை அந்த நாட்டு அரசு நாடு கடத்தவுள்ளது.

சட்டவிரோதமாகக் குடியேற்றமுற்பட்ட 99 பேரும் - விசேட விமானமொன்றின் மூலம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படவுள்ளதாகச் சட்ட விரோதமாக வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்புவதைத் தடுக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமரசிங்க தெரிவித்தார்.

இத்தாலியில் தொழில் புரிவதற்காகச் சட்ட விரோதமாகச் சென்றவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த 99 பேர் இத்தாலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்கள் அனைவரும் இன்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களுடன் இத்தாலியப் பாதுகாப்பு அதிகாரிகளும் வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# தேர்தல் கண்காணிப்பு பணியில் தமிழர்கள் வேண்டாமாம்!

## ஈ.பி.டி.பி. கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் தமிழ் உத்தியோகஸ்தர்களை நியமிக்கக்கூடாது என ஈ.பி.டி.பி. வேண்டுகோள் விடுத்துள்ளது.

வடக்கு - கிழக்கில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்கென தமிழ் உத்தியோகத்தர்களை திரட்டுவதற்கான நடவடிக்கைகளில் உள்ளூர் தேர்தல் கண்காணிப்புக் குழுவான பவ்ரல் அமைப்பு ஈடுபட்டுவருவதாகவும், குற்றம் சாட்டியுள்ள ஈ.பி.டி.பி., தமிழ் கண்காணிப்பு உத்தியோகத்தர்களை வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நியமிக்கும் நடவடிக்கையை பவ்ரல் அமைப்பு கைவிட வேண்டும் எனவும் கோரியுள்ளது.

வெளிநாட்டு உத்தியோகததர்களை அதிகளவில் திரட்டுவது கடினமாக இருப்பதன் காரணமாகவே தாம் உள்ளூர் உத்தியோகஸ்தர்களை நியமிப்பதாக பவ்ரல் அமைப்பு கூறியுள்ளது.

# ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி கூட்டு கூடிய ஆசனங்களை கைப்பற்றவே!

## ராஜித சேனாரட்ன

ஜே.வி.பி - சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தது, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றவே யாகும்.

இவ்வாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன களுத்துறை மாவட்டததிலுள்ள பாணந்துறையில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது.

ஜே.வி.பியின் திட்டம் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற ஆசனங்களைவிட, கூடுதலாகக் கைப்பற்றுவதாகும். ஜே.வி.பியின் நடவடிக்கை மூலம் இது தெரிகின்றது.

களுத்துறை மாவட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்த இருந்த வேளையிலேயே ஜனாதிபதி நாடாளமன்றத்தைக் கலைததார். இதனால் அந்த திட்டங்கள் யாவும் கைவிடப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# உலகவங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் உள்நாட்டு அரசியல் விவகாரம் தொடர்பாக பக்கச்சார்பான கருத்துத் தெரிவித்தாராம்

## கண்காணிப்பு அமைப்பு அறிக்கை

(கொழும்பு)

உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் உள்நாட்டு அரசியல் தொடர்பாக பக்கச்சார்பான கருத்தைத் தெரிவித்துள்ளதாக - சுதந்திர தேர்தல் கண்காணிப்புக்குழு என்ற அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் - பீற்றர் ஹெரல்ட் தெரிவித்துள்ள கருதது கவலைக்குரியது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நனகு ஆராயாது, தமது விமர்சனத்தை ஹெரல்ட் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

முக்கிய விவகாரங்கள் தொடர்பாக கொள்கையளவில் உடன்பாடு இருப்பதை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின், தேர்தல் விஞ்ஞாபனம் உறுதிப்படுத்துகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பவற்றிற்கு ஏகோபித்த பொருளாதார கொள்ளை இல்லை என்ற அர்த்தம் உணர்த்தும் விதமாக கருத்துக்களை அவர் கூறியுள்ளார்.

எனவே, ஆழ்ந்து ஆராயாமல் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பக்கச்சார்பாகக் கருத்தை தெரிவித்துள்ளார் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# சினிமாவைப்போல் அரசியலில் இன்னும் திருப்தியடையவில்லை

## நடிகர் காமினி பொன்சேகா

(கொழும்பு)



கடந்த ஐம்பது வருட காலத்தில் சினிமாவுக்குச் செய்த பங்களிப்பினால், திருப்தியடையும் நான் - அரசியலில் குறைந்த காலம் சேவை செய்ததால் திருப்தியடையாமல் உள்ளேன். இவ்வாறு தெரிவித்தார் நடிகர் காமினி பொன்சேகா.

கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இவரது ஐம்பது வருடம் சினிமாவில் சேவையாற்றியதற்காக நடந்த பாராட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

நான் - எனது ஐம்பது வருட சினிமா வாழ்க்கையைத் திருப்பிப் பார்க்கின்றேன். இதன்மூலம் நான் மிகவும் திருப்தியடைகின்றேன். ஆனால், எனது குறுகிய அரசியல் வாழ்க்கையினால், நான் திருப்தியடையவில்லை. அரசியல் வாழ்க்கை என்பது கலைஞர்களுக்கு அவசியமானது எனக் குறிப்பிட்டார்.

இங்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் சுனில் ஆரியரத்ன உரையாற்றுகையில் - காமினி பொன்சேகா - இந்த நட்டிற்காக மிகப்பெரிய சேவையை செய்துள்ளார். இது வரலாற்றுரீதியில் ஒரு முக்கியமானது எனத் தெரிவித்தார்.



டெனிஸ் அகதிகள் சபை - வவுனியா, மன்னார், திருகோணமலை, அநுராதபுர மாவட்டங்களில் மேற்கொள்ளவிருக்கும் புனரமைப்புத் திட்டங்கள் குறித்து, மேற்படி சபையின் இலங்கைப் பிரதிநிதி பிறிஜிற் எபிசன் வவுனியாவில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் எடுக்கப்பட்ட பட

# ஒருநாள் போட்டியிலும் சென்.ஜோன்ஸ் வென்றது

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 57 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து களமிறங்கி, 48.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதில் சகிந்தன் 30 ஓட்டங்களையும், மதன்ராஜ் 29, நிருபன் 20, மயூரன் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

யாழ்.மத்திய கல்லூரி சார்பில் யசோதரன் 10 ஓவர்கள் பந்துவீசி 31 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், மதூசன் 10 ஓவர்கள் பந்துவீசி 30 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், கலிஸ்ரன் 5 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். ஏனைய நான்கு விக்கெட்டுக்களும் ரன் அவுட் முறையில் வீழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி, 36.2 ஓவர்களில் 125 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தமையால் 57 ஓட்டங்களால் சென். ஜோன்ஸ் கல்லூரி இந்தப் போட்டியில் வெற்றிபெற்றது.

இதில் தினேஸ் 19 ஓட்டங்களையும், ரஜீவ்குமார் 18 ஓட்டங்களையும், மதூசன் 15 ஓட்டங்களையும், றோகான் 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் சார்பில் மயூரன், அன்ரூ, நவகீதன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், மதன்ராஜ், நிருபன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

சிங்கர் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இப் போட்டியின் சிறந்த வீரராக சென். ஜோன்ஸ கல்லூரி அணியைச் சேர்ந்த எம். மயூரன் தெரிவுசெய்யப்பட்டு வெற்றிக் கேடயம் வழங்கப்பட்டதுடன், போட்டியில் வெற்றிபெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் வெற்றிக் கேடயம் வழங்கப்பட்டது.

கடந்த வருடம் முதல் நடைபெறும் இரு கல்லூரிகளுக்குமிடையிலான ஒருநாள் போட்டியில் கடந்த வருடமும் சென்.ஜோன்ஸ் கல்லூரியே வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (58)

## யாழ்.கோட்ட உடற்பயிற்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலையைச் சேர்ந்த 13 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட வீரர்களைக் கொண்ட அணிகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (58)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

திருநெல்வேலி ஆசிரியர் கலாசாலையின் 2004 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

பலாலி ஆசிரியர் கலாசாலையின் அதிபர் கு.சதாசிவமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு - பேராசிரியர் சின்னத்தம்பி பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வு செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று பி.ப 1.30 மணியளவில் நடைபெறும்.

### சூதாட்ட குற்றச்சாட்டு குறித்து

# பாகிஸ்தான் முன்னாள் கப்டன் மீது வழக்குத் தாக்கல் செய்ய முடிவு!



ரஷீத் லத்தீப்

இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதிய நான்காவது ஒருநாள் போட்டி லாகூரில் நடந்தது. இந்த ஆட்டத்தில் 294 ரன்களை இலக்காக எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றிபெற்றது.

இந்தியாவின் வெற்றியைக் கொச்சைப்படுத்தும் வகையில் பாகிஸ்தான் பத்திரிகைகள் சூதாட்டம் நடந்ததாகக் கருத்து தெரிவித்திருந்தன. இதை பாகிஸ்தான் கப்டன் இன்ஸமாம், இந்திய வீரர் ராவிட் ஆகியோர் மறுத்திருந்தனர்.

இதனிடையே பாகிஸ்தான் முன்னாள் கப்டன் ரஷீத் லத்தீப் - லாகூர் போட்டியில் சூதாட்டம் இடம்பெற்றதாக அங்குள்ள தொலைக்காட்சியில் கருத்துத் தெரிவித்தார். முன்னாள் வீரர் ஒருவர் இப்படிக் கூறியது மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், சூதாட்டக் குற்றச்சாட்டை சுமத்திய ரஷீத் லத்தீப் மீது வழக்குத் தொடரப்படும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட்சபைத் தலைவர் சகாரியாகான் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறும்போது - ரஷீத் லத்தீப்பின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. இது ஒரு மோசமான செயல். எனவே அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிப்பதை அதிபர் அலுவலகம் தடுத்து நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் வழக்கைச் சந்திக்கத் தயார் என்று லத்தீப் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறும்போது, ஆதாரத்தின் அடிப்படையிலேயே நான் குற்றம் சுமத்துகிறேன். இது தொடர்பாக ஐ.சி.சியின் ஊழல் தடுப்புக் குழுவைச் சந்திப்பேன் என்றார்.

லத்தீப் விளையாடிய காலங்களில் சக வீரர்கள் மீதே சூதாட்ட புகார் கூறியவர். அவர் மீதும் இதே குற்றச்சாட்டு இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

## மேற்கிந்திய தீவுகளுடனான 2 ஆவது டெஸ்ட் இங்கிலாந்து 7 விக்கெட்டுகளால் வெற்றி

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக ரினிடாட்டில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஐந்தாம் நாள் ஆட்டத்தில் 28 ஓட்டங்கள பெற்றால் வெற்றி என்ற



இலக்குடன் விளையாட ஆரம்பித்த இங்கிலாந்து அணி, 5 ஆம் நாளில் வீசப்பட்ட 5 ஓவர்களில் தனது வெற்றி - இலக்கை அடைந்தது.

முன்னதாக மேற்கிந்தியத் தீவுகள் அணி நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

தனது முதலாவது இனிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இங்கிலாந்து அணி 319 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முதல் இன்னிங்ஸை விட 101 ஓட்டங்கள் கூடுதலாகப் பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகள் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கி 209 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

99 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணி, மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இரண்டு இன்னிங்ஸிலும் 6 விக்



கெட்டுக்களைக் கைப்பற்றிய ஹர்மிஷன் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இங்கிலாந்து அணி இந்த டெஸ்டில் வெற்றி பெற்றதன் மூலம் 4 போட்டிகள் கொண்ட தொடரில் 2:0 என்ற நிலையில் முன்னணி வகிக்கிறது.

மூன்றாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

# பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி முடிவுகள்

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

உதைபந்தாட்டத்தில் முதலாம் இடத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகமும், 2 ஆம் இடத்தை வல்வை விளையாட்டுக் கழகமும் பெற்றன.

கரப்பந்தாட்டம் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், 2 ஆம் இடத்தை அண்ணா விளையாட்டுக் கழகமும் பெற்றன.

பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், 2 ஆம் இடத்தை விக்கிரமன்ஸ் விளையாட்டுக் கழகமும் பெற்றன.

எல்லே விளையாட்டில் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், 2 ஆம் இடத்தை விக்கிரமன்ஸ் விளையாட்டுக் கழகமும் பெற்றன. பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், 2 ஆம் இடத்தை விக்கிரமன்ஸ் விளையாட்டுக் கழகமும் பெற்றன.

வலைப்பந்தாட்டத்தில் முதலாம் இடத்தை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், 2 ஆம் இடத்தை வல்வை விளையாட்டுக் கழகமும் பெற்றன.

கபடி ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகமும், 2 ஆம் இடத்தை சென்.தோமஸ் விளையாட்டுக் கழகமும் பெற்றன.

துடுப்பாட்டத்தில் முதலாம் இடத்தை கழுகுகள் விளையாட்டுக் கழகமும், 2 ஆம் இடத்தை நெடியகாடு விளையாட்டுக் கழகமும் பெற்றன.

சிறந்த விளையாட்டு அணிகளுக்கான தெரிவில் முதலாம் இடத்தை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், 2 ஆம் இடத்தை விக்கிரமன்ஸ் விளையாட்டுக் கழகமும், 3 ஆம் இடத்தை வல்வை விளையாட்டுக் கழகமும் பெற்றன.

சிறந்த சுவட்டு விளையாட்டு வீரனாக தொண்டமனாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.சிவசுதனும், வீராங்கனையாக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செ.தயாளினியும், சிறந்த தடகள வீரனாக கலைவாணி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சி.மஞ்சீவன், வீராங்கனையாக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செ.தயாளினியும் தெரிவுசெய்யப்பட்டனர் என விளையாட்டு உத்தியோகத்தர் முகுந்தன் தெரிவித்தார். (12)

## பந்துவீச்சுப் பயிற்சியாளர் பாகிஸ்தானுக்கு தேவையில்லை

### மியான்டட் கருத்து

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு உடனடியாக பந்துவீச்சுப் பயிற்சியாளர் நியமிக்கவேண்டும் என்று முன்னாள் கப்டன் இம்ரான்கான் கருத்துத் தெரிவித்ததற்கு பயிற்சியாளர் மியான்டட் பதில் அளித்துள்ளார். பந்துவீச்சு பயிற்சியாளரால் பலன் கிடைக்காது என்று அவர் கூறியுள்ளார்.

இந்தப் போட்டித் தொடர் நடைபெற முயற்சி எடுத்த இந்தியப் பிரதமர் வாஜ்பாய், பாகிஸ்தான் அதிபர் முஷாரப் ஆகியோருக்கு மியான்டட் நன்றி தெரிவித்தார்.

உதிரி ஓட்டங்கள் கொடுப்பதை பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் கட்டுப்படுத்த வேண்டும். தொடர் வெற்றி வாய்ப்பு இரு அணிகளுக்கும் சம நிலையில் உள்ளது என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

# 4 ஆவது கட்ட வேட்பாளர் பட்டியல்; பாரதீய ஜனதா கட்சி வெளியிட்டது

(டெல்கி)

பாரதீய ஜனதாக் கட்சியின் நான்காவது வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. பிரமோத் மகாஜன், சுஷ்மா போன்றவர்கள் பிரசாரத்தில் ஈடுபடவிருப்பதால் தேர்தலில் போட்டியிடமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

பாரதீய ஜனதாக் கட்சியின் நான்காவது வேட்பாளர் பட்டியலை கட்சியின் செய்தித் தொடர்பாளர் முக்தர் அப்பாஸ் நக்வி நேற்றுமுன்தினம் வெளியிட்டார். பட்டியலில் 36 பெயர்கள் இடம்பெற்றிருந்தன.

மத்தியப் பிரதேச முன்னாள் முதலமைச்சர் கைலாஷ் ஜோஷி, ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சர் பாபுலால் மராண்டி, ராஜஸ்தான் மாநில முதல்வர் வசுந்தரா ராஜேயின் மகன் துஷ்யந்த்சிங், நிதியமைச்சர் ஜஸ்வந்த் சிங் ஆகியோர் பட்டியலில் இடம்பெற்றிருப்பவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

நான்காவது பட்டியலுடன் இதுவரை பாரதீய ஜனதாக் கட்சி 323 வேட்பாளர்களின் பெயர்களை வெளியிட்டிருக்கிறது. அவர்களில் 152 பேர் முன்னாள் எம்.பிக்கள், 28 பேர் பெண்கள்.

இன்னும் 40 முதல் 42 வேட்பாளர்களின் பெயர்கள் தேர்வு செய்யப்பட்டு 27 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது. மொத்தம் 365 வேட்பாளர்களை களத்தில் இறக்க பாரதீய ஜனதா தீர்மானித்துள்ளது.

பிரமோத் மகாஜன், சுஷ்மா சுவராஜ், அருண் ஜேட்லி, முக்தர் அப்பாஸ் நக்வி ஆகியோர் தேர்தலில் போட்டியிடமாட்டார்கள். தேர்தல் பிரசாரத்தில் இவர்கள் தீவிர பங்கு எடுத்துக்கொள்வார்கள்.

இந்தத் தகவலை பாரதீய ஜனதாக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் முக்தர் அப்பாஸ் நக்வி தெரிவித்தார்.

# முதற்கட்டத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் ஆரம்பம்

(டெல்கி)

இந்திய மக்களவைக்கு முதல் கட்டத் தேர்தல் நடக்கவுள்ள 141 தொகுதிகளில் வேட்புமனுத் தாக்கல் நேற்று ஆரம்பமாகியது.

5 கட்டங்களாக இந்தத் தேர்தல் நடக்கவுள்ளது. முதற்கட்டமாக வரும் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி ஆந்திரா, கர்நாடகா, குஜராத், காஷ்மீர், மிசோரம், டையு - தாமன், சத்தீஸ்கர், பீஹாரின் ஒரு பகுதி, மகாராஷ்டிரம், அஸாம், மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் 141 தொகுதிகளில் தேர்தல் நடக்கவுள்ளது.

இதற்கான வேட்புமனுத் தாக்கல் நேற்றுத் தொடங்கியது. மார்ச் 31 ஆம் திகதி வரை வேட்புமனுக்கள் தாக்கல் நடைபெறும். இந்த முதல் கட்டத் தேர்தலில் மட்டும் 6.75 கோடி பேர் வாக்களிக்கவுள்ளனர்.

அடுத்த கட்டத் தேர்தல்கள் ஏப்ரல் 22, 26, மே 5, 10 ஆம் திகதிகளில் நடக்கவுள்ளது. மே 10 இல் நடக்கும் கடைசிக் கட்டத் தேர்தலில்தான் தமிழகத்தில் வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது.

அனைத்துக் கட்டத் தேர்தல்களும் முடிந்து மே 13 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும். அன்று பிற்பகலிலேயே முடிவுகள் தெரிந்துவிடும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

# இணைந்த வடக்கு - கிழக்கு தாயகத்திலிருந்து மட்டு- அம்பாறை விலகுவது சாத்தியமற்றது

## திருமலை முதன்மை வேட்பாளர் சம்பந்தன் பேச்சு



இணைந்த வடக்கு - கிழக்கு தாயகம் என்பதில் மட்டு - அம்பாறை தமிழ் மக்கள் விலகிப்போவது என்பது சாத்தியமற்றது. அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக வாக்களிக்குமாறு, எந்தத்தரப்பும் அங்கு மக்களை கோரியிருக்கவுமில்லை என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும், திருமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக நேற்றுமுன்தினம் குடாநாட்டுக்கு வருகை தந்த அவர் - யாழ்.நகரில் தமிழரசுக் கட்சி தலைமையகத்தில் ஆதரவாளர்களிடையே உரையாற்றினார்.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர்களான - மாவை.சேனாதிராசா, சி.சிவமகாராசா மற்றும் க.ஈழவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாலை 5.15 மணியளவில் விமானம் மூலம் பலாலி விமானநிலையத்துக்கு வருகைதந்த இரா.சம்பந்தன், 6.15 மணியளவில் தமிழரசுக்கட்சி அலுவலகத்துக்கு வருகைதந்தார்.

ஆதரவாளர்களிடையே உரையாற்றிய அவர், பின்னர் ஊடகவியலாளர்களது கேள்விகளுக்குப் பதிலளித்தார். வட - கிழக்குப் பகுதி மக்களுக்கு இடைக்கால நிர்வாக கட்டமைப்பினை வழங்குவதன் மூலம், முஸ்லிம் மக்களுக்கு அவர்களிடையே பிரசார நடவடிக்கைகளை தாங்கள் முன்னெடுத்துவருகின்றோம். அத்துடன், திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முதன்மை வெற்றியைப் பெறும்.

இதேவேளை, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வன்னிப் பகுதி மக்களும் இந்தத் தேர்தலில் வாக்களிக்க ஏதுவாக உரிய நடவடிக்கைகளை எடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்த அவரிடம் மட்டு - அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அழுத்தங்களுக்கு உட்படுத்தபட்டுள்ளனரா? என்ற கேள்விக்கு பதிலளித்த போது - இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக வாக்களிக்குமாறு எந்தத் தரப்புக்களும் கோரியிருக்கவில்லை எனத் தெரிவித்தார்.

ஆயினும், மட்டு - அம்பாறை மாவட்டங்களில் போட்டியிட்டு, வெற்றியீட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் வெற்றிபெற்ற பின்னர், ஏனைய கூட்டமைப்பின் அங்கத்தவர்களுடன் இணைந்துசெயற்படுவரா? எனக் கேட்டபோது - சுயாட்சி மற்றும் தாயகக்கோரிக்கைகள் உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்தே, மட்டு - அம்பாறை மாவட்டத்திலும், தமிழத் தேசியக் கூட்டமைப்பின்கீழ் அவர்கள் போட்டியிடுவதால், தொடர்ந் தும் அவர்கள் இணைந்தே செயற்படுவரெனவும் அவர் பதிலளித்தார். (202, 111)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியேற்றல்

துன்னாலைப் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி போடும் நிகழ்வு - இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை உச்சில் சனசமூக நிலையத்திலும், 11 மணிமுதல் 12.30 மணிவரை மத்தொனி சனசமூகநிலையத்திலும் தடுப்பூசியேற்றல் இடம்பெறவுள்ளது.

நாளை காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை யாக்கரு சனசமூக நிலையத்திலும், 4 மணி முதல் 12.30 மணிவரை காட்டுப்புலம் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசியேற்றல் இடம்பெறவுள்ளது.

வளர்ப்பு நாய்களை வைத்திருப்பவர்கள் அனைவரையும் உரிய நேரத்திற்கு உரிய இடங்களுக்கு நாய்களைக்கொண்டு வந்து, தடுப்பூசிகளை போடுமாறு சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார். (12)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் - கடந்த ஞாயிற்றுக்கிழமை பாற்பண்ணை ஒலிம்பிக் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூடத்தில் வர்த்தகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டம் - கூட்டமைப்புப் பிரமுகர் துரைமணி தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கூட்டமைப்பு வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், சொலமன் சூ.சிறில் ஆகியோரும், முன்னாள் கிராமசேவையாளர் சங்கத் தலைவர் சிவராசா, யாழ்நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், மகளிர் அரசியற் துறைப்பொறுப்பாளர் மா.பூமகள், யாழ்.பிரதேச பொறுப்பாளர் சி.உமையகுமார், அரசியற்துறைப் பிரமுகர் பாலையா உட்படப் பலர் கலந்துகொண்டனர்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : கி.பிரணவி
முகவரி : 11 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

முதலாவது அகவையில்



பெயர் : ர.பரிதிமாலன்
முகவரி : வளலாய், அச்சுவேலி.

முதலாவது அகவையில்



பெயர் : சு.மேரிகென்சியா
முகவரி : இல 4, கே.கே.எஸ். வீதி நாவாந்துறை.


# தமிழரின் ஒற்றுமைக்கு ஈனம் விளைவிக்க விரும்பவில்லை

## போட்டியிலிருந்து விலகிய சுயேட்சை வேட்பாளர்

தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு ஈனம் விளைவித்தவனாக நான் விளங்க விரும்பவில்லை. அதனாலேயே, தேர்தலிலிருந்து ஒதுங்கினேன் என - யாழ்.மாவட்டத்தில் சுயேட்சையாக போட்டியிடுவதற்காக வேட்புமனுத்தாக்கல் செய்து, பின்னர் அதிலிருந்து ஒதுங்கிக் கொண்ட மார்க்கண்டு இராசேந்திரம் தெரிவித்தார்.

நமது ஈழநாட்டிற்கு இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் - ஜனநாயக உரிமையின் அடிப்படையில், எமக்குள்ள உரிமையினடிப்படையில், போட்டியிடத் தீர்மானித்த நாம், சுயேட்சைக்குழுவாக கடந்த மாதம் 17 ஆம் திகதி யாழ்.தேர்தல் அத்தாட்சி அலுவலரிடம் எமது வேட்புமனுவைத் தாக்கல் செய்தோம்.

எனினும், நாம் வீட்டிற்கு வந்ததும் எமது அயலவர்கள் எமக்கு அச்சுறுத்தல் வரும், கொலை செய்யப்படுவீர்கள், இந்தத் தேர்தலில் போட்டியிடாதீர்கள் எனக் கூறினார்கள். ஆனால், நான் வேட்பு மனுத் தாக்கல்செய்து இரண்டு நாட்களாகியும் அப்படி எதுவும் நடக்கவில்லை.

அந்தவேளைதான், நாம் யோசித்தோம். தமிழர்கள் ஒன்றுபட்டு, ஒரு குடையின் கீழ் நிற்கவேண்டிய இந்த நேரத்தில், நாம் ஏன் எமது இனத்தை விற்றுப்பிழைக்கும் சிலரைப்போல வாழ நினைக்கவேண்டும், அல்லது கதிரை ஆசைகொண்டு அலையும் வயோதிபர்களைப்போல் இராணுவத்தின் துணையுடன், அடாவடித்தனம் புரியவேண்டும்.

எனவே, எமது இனத்தின் தியாகங்கள் மதிக்கப்படவேண்டுமானால், எமது இனம் கீழ்த்தரமான ஈனகுணமற்ற ஒற்றுமையை மதிக்கும் இனமாக, சர்வதேசத்தால் மதிக்கப்படவேண்டுமானால், இந்தத் தேர்தலில் ஒற்றுமைக்கு வாக்களிக்கவேண்டும்.

ஒற்றுமைப்பட தமிழரின் தேசத்தில் நடைபெறப்போகும் தேர்தலில் வேண்டுமானால் நாம் போட்டியிடுவோம் என எண்ணினேன். அதனால், நான் செய்த வேட்புமனுவை வாபஸ்பெற்றுக் கொண்டேன். இதனை இன்னும் சிலர் செய்தால் நன்றாக இருக்குமென நான் நினைக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சாவகச்சேரி பிரதம தபாலகத்தில் வாக்காளர் அட்டைகள் தேங்கியுள்ளன

தென்மராட்சி தெற்கு - தனங்கிளப்பு, மறவன்புலோ, கோயிலாக்கண்டி ஆகிய பிரதேசங்களை சேர்ந்த வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் பெருமளவு - சாவகச்சேரி பிரதம தபாலகத்தில் தேங்கியுள்ளதாகத் தபாலக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட இடங்களில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாமையால், அங்கு சென்று வாக்காளர் அட்டைகளை விநியோகிக்க முடியாது. இதனால், இவர்களுக்குரிய வாக்காளர் அட்டைகள் சாவகச்சேரி பிரதம தபாலகத்தில் வைத்தே வழங்கப்படுகின்ற போதிலும், அங்குள்ள குடும்பங்களில் ஒரு சிலரே வாக்காளர் அட்டைகளைப் பெற்றுள்ளனர். மிகுதியான பெருமளவு வாக்காளர் அட்டைகள் தபாலகத்தில் தேங்கிக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகித்து முடிவுற்ற போதிலும், தென்மராட்சி தெற்கு மக்களின் வாக்காளர் அட்டைகளே பெருமளவு சாவகச்சேரி பிரதம தபாலகத்தில் தேங்கியுள்ளதாகவும், இதனை உரியவர்கள் வந்து நேரகாலத்துடன் பெற்றுக்கொள்ளுமாறும் - சாவகச்சேரி பிரதம தபாலக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (25)

# நிமலராஜன் கொலைவழக்கு; சந்தேக நபருக்கு பிழைவிறாந்து!

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கின் முதலாவது சந்தேகநபரான கந்தசாமி ஜெகதீஸ்வரனை உடனடியாகக் கைதுசெய்யுமாறு, யாழ்.பொலிஸாருக்கு - மாவட்ட நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் கொலை தொடர்பாக நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட நீதிமன்றில் விசாரணை இடம்பெற்றபோது, பிணையில் விடுவிக்கப்பட்ட இரண்டாவது சந்தேகநபரான பழனிச்சாமி விஸ்வநாதன், மூன்றாம் சந்தேகநபரான டேவிற்மைக்கல் கொலின், நான்காம் சந்தேகநபரான காராளசிங்கம் சிந்துபரன் அல்லது பாட்ஷா ஆகியோர் நீதிமன்றிற்கு சமூகமளித்திருந்த போதிலும், முதலாவது சந்தேகநபரான கந்தசாமி ஜெகதீஸ்வரன் சமூகமளித்திருக்கவில்லை.

இதனையடுத்து, யாழ்.மாவட்ட நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

எனினும், ஐந்தாவது சந்தேக நபரான பாலச்சந்திரன் உதயபவன் என்பவரது விசாரணை தொடர்ந்தும் இடம்பெறுவதால், அவரை தொடர்ந்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ப)

## சின்னஞ்சிறு செய்திகள்

### கலைப்போட்டி

(அரியாலை)

அரியாலை காந்தி சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு, இல்லங்களுக்கிடையில் கலைப்போட்டிகள் நடைபெறவுள்ளது.

கவிதை, கட்டுரை, பேச்சு (தமிழ்), பேச்சு (ஆங்கிலம்) போன்ற போட்டிகளே வயதுப் பிரிவுகள் ரீதியில் நடைபெறவுள்ளது. (55)

### நிகொட் நிறுவனத்தினால் வீடுகட்ட உதவி

(யாழ்ப்பாணம்)

நிகொட் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் 500 வீடுகள் புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குருநகர், கொழும்புத்துறை, சாவகச்சேரி உள்ளிட்ட பகுதிகளிலேயே இந்த வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மிகவும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளதாக நிகொட் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ப)

### யாழ்ப்பாணத்தில் மண் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மண் பரிசோதனை செய்வதற்கு சி.ஐ.சி. விவசாய நிறுவனம் முன்வந்துள்ளது.

இது தொடர்பான கருத்துரைகள் கமநலசேவை நிலையங்களில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் முதற்கட்டமாக - கைதடி கமநலசேவை நிலையத்தில் கருத்துரைகள் இடம்பெற்றது. இவை தொடர்பான மேலதிக விளக்கங்களை கமநலசேவை நிலையத்தில் விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம். (46)

### கணினிக்கூடம் திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வராக்கல்லூரியில் நேற்றுமுன்தினம் கணினிக்கூடம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. கல்லூரியின் பழையமாணவனும், லண்டனில் வசிப்பவருமான அ.சுந்தரராஜன் என்பவரால் இந்தக் கணினிக்கூடம் திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - கல்லூரியின் பழையமாணவர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

திறந்து வைக்கப்பட்ட இணையத் தளத்தின் முகவரியாக - **WWW. Vaidyeshwara college. o-f.com** எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விலாசங்களினூடாக, கல்லூரி பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென கல்லூரியின் கணினிக் கூடத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள எஸ். செல்வநாயகம் தெரிவித்துள்ளார். (ப)




# தொழில் அனுபவங்களை எவரும் கவனத்தில் எடுப்பதில்லை

எழில் கொஞ்சும் ஏழாலை மண்ணில் தொழில் நிறுவனம் ஒன்றை உருவாக்கும் எண்ணம் என்னில் உதித்தது. இந்த எண்ணத்தின் விளைவே 'மகாத்மா அச்சகம்' அச்சகத்தின் மூலம், அதிகளவில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுத்தல் முதலான பல எண்ணங்களுடன், ஏழாலையில் மகாத்மா அச்சகத்தை உருவாக்கினேன்.

ஏழாலையில் உருவாக்கப்பட்டு, சூழ்நிலையால் இடம் பெயர்ந்து நான்கு வருடங்களாக இந்து மகளிர் ஒழுங்கையில் இயங்கிவந்து, தற்போது குமாரசாமி வீதியில் இயங்கிவரும் மகாத்மா அச்சகத்தின் உரிமையாளர் நவரத்தினம் தெய்வேந்திரம் இவ்வாறு கூறினார்.

மகாத்மாவின் உரிமையாளரான தெய்வேந்திரம் இந்த அச்சகத்தின் உருவாக்கம் அச்சகம் மூலமாக, தான்பெற்ற அனுபவங்கள் என்ற வகையில் எம்முடன் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். அவரின் கருத்துக்கள் இங்கே பிரசுரமாகின்றன.

நீர் கொழும்பு பிரதேசத்தில் அரச உத்தியோகம் ஒன்றில் பணியாற்றிவந்தேன். இருபது ஆண்டுகளாக அரச உததியோகம் மூலம், என்னுடைய வாழ்க்கை நன்றாக ஓடியது. இந்த வேளையில் 1977 ஆம் ஆண்டு ஆவணிமாதம் தொடங்கிய இனக்கலவரம் என் போன்ற பலரைப் பாதித்தது. நீர்கொழும்பிலிருந்து இனக்கலவரம் காரணமாக ஏழாலை மண்ணிற்கு திரும்பினேன்.

அரசவேலையொன்றைச் செய்துவிட்டு 41 வயதில் வேலையொன்றும் செய்யாமல் இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. இனக்கலவரத்தால் 1981 ஆம் ஆண்டு அரச வேலையில் இருந்து, விலகி பின்னர் சுயமாகவே ஒரு வேலையில் ஈடுபட்டால் என்ன என்ற எண்ணம் என்னிடத்தில் தோன்றியது.

இதன் காரணமாக தோன்றியதே, மகாத்மா அச்சகம் ஆகும். எனது சொந்த ஊராகிய ஏழாலையில் என்னுடைய சொந்தக் காணியில் முதலில் இந்த அச்சகத்தை ஆரம்பித்தேன்.

மகாத்மா என்ற பெயரை என்னுடைய அச்சகத்திற்குச் சூட்டினேன். மகாத்மா காந்தியின் பெயராக அது இருப்பதால் மட்டுமல்லாது - ஏழாலையில் பல மகாத்மாக்கள் உயர் வாழ்ந்து மடிந்தார்கள். பல பெரியவர்கள் வாழ்ந்த பூமி ஏழாலை. இந்த ஊரில் நிறுவும் அச்சகம் மகாத்மா என்ற பெயரைப் பெறுவதே சிறப்பு என்ற அடிப்படையில்தான் என்னுடைய அச்சகத்துக்கு மகாத்மா அச்கம் என்ற பெயரைச் சூட்டினேன்.

ஏழாலை கிராமத்தில் நான் அச்சகத்தை நிறுவும்போது, எமது கிராமத்தில் இதனை செய்யலாமா என்று முதலில் தயங்கினேன்.

அனுபவம் குறைந்தவன் எவ்வாறு அச்சகத்தை நடத்துவது என்ற தயக்கம் ஆரம்பத்தில் இருந்தது. எனினும், அரச உத்தியோகம் ஒன்றின் மூலமாக - வெளியிடம் ஒன்றில் நின்ற அனுபவத்தால் சிங்களம், ஆங்கிலம் போன்ற மொழிகளை ஓரளவு அறிந்து வைத்திருக்கின்றேன். இதன் மூலமாக, சமாளித்துக்கொள்வேன். தொடர்புகளை வைத்திருப்பதற்குரிய மொழியறிவு இருக்கின்றது. வீணான அச்சம் ஏன் என்ற உறுதியுடன் தொழிலை ஆரம்பித்தேன்.

அச்சகத்தின் வேலைகள் எவ்வாறு இருக்கும் என்பதை திருநெல்வேலியிலுள்ள சுவாமிநாதனின் அச்சகத்தில் நின்று பெற்றுக்கொண்டேன். அதன் பின்னர் அனுபவமுள்ள வேலைக்காரனை என்னோடு இணைத்து அச்கத்தை ஆரம்பித்தேன். ராஜரட்ணம், பாக்கியநாதன், விநாயகமூர்த்தி ஆகியோர் இந்த வகையில் என்னோடு இணைந்து கொண்டனர்.

என்னுடைய விடாமுயற்சி காரணமாக, அரச கூட்டுத்தாபனங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் முதலியோர் என்னுடைய அச்சகத்தில் தமது தேவைகளை நிறைவுசெய்துகொள்கின்றனர்.

நினைவு மலர் அடித்தல், புத்தகங்களை கட்டுதல், ஆய்வுக் கட்டுரைகளை கட்டிக்கொடுத்தல், பில் புத்தகங்களை அச்சடித்தல் முதலான தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன.

தொழில் நிறுவனங்கள் அதிகளவில் யாழ்ப்பாணத்தில் வளரவில்லை. எனினும், ஒருசில தொழில் நிறுவனங்கள் உள்ளூர் உற்பத்தியில் ஈடுபட்டுவருகின்றன. அவ்வாறு, ஈடுபட்டு வருகின்ற நிறுவனங்கள் வெளியிடங்களிலிருந்து தமது உற்பத்திப் பொருட்களுக்கான லேபிள்களை அச்சடித்துப் பெற்றுக்கொள்கின்றன.

சில இடங்களில், குறித்த நிறுவனம் ஒன்றே தனது உற்பத்திக்குரிய லேபிள்களை அச்சடிப்பதற்குரிய அச்சகங்களை அமைத்துக்கொடுத்து அதன்மூலம், தமது உற்பத்திக்கு தேவையான லேபிள்களையும், அச்சக வேலைகளையும் ஊக்குவித்து வருகின்றன. இவை வடக்கு - கிழக்குப் பகுதிகளில் காணப்படுவதில்லை. இதனால், எமது பிரதேசங்களில் அச்சகங்கள் வளரமுடியாமல் உள்ளன.

குறிப்பிட்டுச் சொல்வதானால், வடக்கு - கிழக்குக்குத் தேவையான புத்தகங்கள் வெளியிடங்களில் அவை செய்யப்படுகின்றபோது, தொழில்வாய்ப்பை மேலும் அதிகரித்துக் கொள்ளமுடியும்.

இந்த இடத்தில் ஒன்றைக்குறிப்பிட வேண்டிய தேவையுண்டு. வங்கிகளில் கொடுக்கப்படுகின்ற கடன் வசதிகளும் குறைவாக இருக்கின்றன என்பதே இந்த விடயமாகும்.

வங்கியில் கடன் கேட்கப் போனால் காணி இருக்கிறதா, பூமி இருக்கிறதா என்றே கேட்கின்றனர். அனுபவம் இருக்கின்றதா என்று கேட்பவர்கள் குறைவு. தொழில் அனுபவத்தை எவரும் பார்ப்பதில்லை. இதன் மூலமாக, தொழில் அனுபவங்கள் வீணடிக்கப்படுகின்ற ஒரு நிலையே காணப்படுகின்றது.

நான் எனது சொந்த இடத்தில் ஏழாலையில் மகாத்மா அச்சகத்தை ஆரம்பித்து அதனை பெரிய அச்சகமாக மாற்ற முயன்ற வேளையில், இடப்பெயர்வுக்கு உள்ளானேன். அதன் காரணமாக நல்லநிலை ஒன்றிற்கு வளரமுடியாமல் போயவிட்டது.



அதேவேளை, இனக்கலவரம், இனப்பிரச்சினை காரணமாக பலர் தகுதியுடையவர்களாக இருந்தும், சாதாரண தொழில்களில் ஈடுபடுவது மனவேதனை அளிக்கின்றது. இவ்வாறான பிரச்சினைகள் எதுவும் ஏற்படாமல் இருந்திருந்தால் யாழ்ப்பாணம் என்றைக்கோ நல்லதொரு நிலையை அடைந்திருக்கும். நாடு வளத்தைப் பெருக்கிக்கொண்டிருக்கும்.

நான் அரச வேலையை இழந்து நின்ற வேளையில் என்னுடைய நகைகள், பொருட்கள் என்பனவும் களவு போயின. இந்த நிலையில் - காலமும், இளமையும், வேகமும் புதிய தொழில் ஒன்றைச் செய்யத் தூண்டியது. சுயதொழில் மூலம் விருத்தியடைய வேண்டும் என்ற தீர்மான முடிவினை எடுத்துக்கொண்டேன். அதன் விளைவுதான் மகாத்மா அச்சகம்.

எத்தனையோ அச்சகங்கள் தற்போது வந்துவிட்டன. அச்சிடப்படுகின்ற விடயங்களைப் பொறுத்தவரையில் எழுத்துப் பிழைகள் என்பது, நீங்கினதாகத் தெரியவில்லை. அச்சகங்களின் பணியைக் கணினிகள்மூலம் செய்தபோதும், அவற்றிலும் எழுத்துப்பிழைகள் வந்த வண்ணமேயுள்ளது. இந்த வகையில் அச்சுப் பணி என்பது தேக்க நிலையில்தான் உள்ளது.

அச்சகக் கூடங்களில் முதலாளிக்கும், தொழிலாளிக்கும் இடையே சரியான ஒரு புரிந்துணர்வு அவசியமானது. இருதரப்பும் முரண்படாமல் இருப்பதே ஒரு அச்சகக் கூடத்தின் வளர்ச்சிக்கு நன்மையளிக்கும்.

அச்சுக் கூடத்தைப் பொறுத்தவரையில், தொழிலாளர் தட்டுப்பாடு காணப்படுகின்றது. சாதாரண கூலிவேலை செய்பவன் 200 முதல் 300, 400 வரை நாளொன்றுக்கு பெற்றுக்கொள்கின்றான். இந்த நிலையிலுள்ள ஒரு சூழ்நிலையில் அச்சுக் கூடத்தில் பணிபுரியும் தொழிலாளிக்கு இந்தளவு கூலியைக் கொடுக்க முடியாதுள்ளது. இதன் காரணமாக, தொழிலாளிகள் எவரும் நிலைத்துநிற்பது கிடையாது.

வருவதும், போவதுமான நிலைப்பாடே காணப்படுகின்றது.

என்னுடைய அச்சகத்தின் மூலமாக பெருமளவிலான வருமானத்தை ஈட்டிக்கொள்ளவில்லை என்பது உண்மையாய் இருந்தாலும், சமூகத்தில் மகாத்மா அச்சகம் என்று சொன்னால் நல்லதொரு பெயர் நிலவுவதையிட்டு என்னிடத்தில் மிகுந்த மகிழ்ச்சியும், திருப்தியும் ஏற்படுகின்றது.

இவ்வாறு, மலர்ந்த முகத்துடன் முகத்தில் மிகுந்த திருப்திப்பட்டுக்கொண்டு எம்முடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். தெய்வேந்திரம் தன்னுடைய பல்வேறு வேலைகளைவிடுத்து எமக்கு ஒத்துழைப்பு நல்கியமைக்கு நாம் அவருக்கு நன்றி கூறி விடைபெற்றோம்.

**நேர்காணல் - பூ.நகுலன்**

# மனித நாசினிகள்

கண்மூடித்தனமான விவசாய இரசாயனங்களின் பாவனை மனித குல்த்திற்குக் கேடானது என்பதை எவரும் மறுப்பதில்லை. உணவின் மீதான கோரிக்கை வளர்ந்து கொண்டேயிருப்பதால், விவசாயத்துறை உற்பத்தியைப் பெருக்குவதற்காக - விவசாய இரசாயனப் பொருளைச் சார்ந்திருக்கும் நிலை அதிகரித்துள்ளது.

பூச்சிக் கொல்லிகளால் ஏற்படும் நன்மையான விளைவுகளைப் புறந்தள்ள முடியாதபோது, அது ஏற்படுத்தும் தீங்கிழைப்புக்களையும் புறக்கணிக்கமுடியாது. பொருளாதாரத் துறையில் குறை அபிவிருத்தியுள்ள நாடுகளில் ஒவ்வொரு நிமிடமும் யாராவதொருவர் பீடை கொல்லிகளால் நஞ்சூட்டப்படுகிறார் எனவும், ஒவ்வொரு ஒன்றே முக்கால் மணிநேரமும் பீடைகொல்லியால் மரணமொன்று நிகழ்கின்றதெனவும் உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் தடைசெய்யப்பட்ட பீடைகொல்லிகளில் பல மூன்றாம் உலக நாடுகளில் சர்வசாதாரணமாகப் பாவனையில் உள்ளதே இதற்கான காரணமாகும். பீடைகொல்லிகளை உற்பத்திசெய்யும் பிரமாண்டமான பன்



நாட்டு நிறுவனங்கள் மிகவும் நவீனமான சந்தைப்படுத்தும் உத்தியைக் கையாளுகின்றன.

பட்டினி கிடக்கும் நாடுகளுக்குத் தாம் உணவூட்ட உதவி செய்துகொள்வதாகப் பறைசாற்றும் பன்நாட்டு நிறுவனங்கள் தமது நாடுகளில் தடைவிதிக்கப்பட்ட இரசாயனங்களை மிகச் சாதுரியமாக மூன்றாம் உலக நாடுகளின் சந்தையில் நுழைந்துவிடுகின்றன.

தங்கள் தாய் நாடுகளிலுள்ள சட்டவிதிகளிருந்து தப்புவதற்காக தடைசெய்யப்பட்ட பீடை கொல்லியின் தனித்தனி இரசாயனக் கூறுகளை மூன்றாம் உலக நாடொன்றுக்குக் கப்பலேற்றி அங்குள்ள தொழிற்சாலைகளில் அவற்றை உற்பத்திசெய்கின்றன. இப்படித் தயாரிக்கப்பட்ட பீடைகொல்லி சட்டவிதிகளின் தடங்கலின்றி எந்த மூன்றாவது நாட்டுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

உணவிலும், நீரிலும் சிறுகச் சிறுகச் சேரும் இந்தப் பூச்சி நாசினிகள் நாளடைவில் மனித உடலில் பெருஞ்செறிவில் திரண்டு மனித நாசினியாகிவிடுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரொருவரின் பணிப்புரையின்றி மருந்துச்சாலைகளில் ஒரு வலுவுள்ள மருந்தைப் பெறமுடியாதபோது, அதிக நச்சுத்தன்மையுள்ள விவசாய இரசாயனங்களை மட்டும் எதுவித கட்டுப்பாடுகளுமின்றி பெற்றுக்கொள்ளும் நிலை உருவாகியுள்ளது.

பயிர்களின் அறுவடைக்கு முந்திய இரண்டொரு தினங்களில் பூச்சி கொல்லிகளைப் பாவிப்பதும், அரிசி போன்ற உலர் உணவுகளின் மேல் மலத்தியோன் சேர்த்துக் களஞ்சியப்படுத்துவதும் இங்கு எழுதப்படாத விதிகளாகிவிட்டன.

விவசாய இரசாயணங்கள் - முறையாகவும், சரியாகவும் பிரயோகிக்கப்படுவதை உறுதிசெய்யவும், தரக்குறைவான அல்லது ஏமாற்றுப் பொருள்களின் விற்பனைக்கெதிராகக் கொள்வனவாளரைப் பாதுகாக்கும் புதிய அணுகுமுறை அமுலாக்கப்படல் வேண்டும். தவறின் அறியாமைக்கும் மேலாக அதிக இலாபம் என்னும் குறிக்கோளை எட்டும் வர்த்தக நடவடிக்கைகளும் சேர்ந்து எமது மண்ணை மேலும் புண்ணாக்கிவிடும்.

# தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | இறுதித் திகதி |
|---|---|---|---|
| U.N.H.C.R 97, றோஸ் மெட் பிளேஸ், கொழும்பு - 07 | இணை நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் | சட்டம், சமூகவிஞ்ஞானம், அபிவிருத்தி தொடர்பான பட்டப்படிப்பு | 02.04.2004 |
| C.D.C. கைத்தொழில் சேவைகள் நிறுவனம் இல.40/4 சமாசிமாவத்தை, நுகேகொட. | 1) சந்தைப்படுத்தல் அதிகாரி | N.D.T. அல்லது விஞ்ஞானமானி பட்டதாரி, குறிப்பிட்ட துறையில் இருவருட அனுபவம். வயது 25 - 27 | 28.03.2004 |
| | 2) உதவி சந்தைப்படுத்தல் அதிகாரி | G.C.E. A/L, குறிப்பிட்ட துறையில் 3 வருட அனுபவம் வயது 20 - 25 | 28.03.2004 |
| | 3) குளிரூட்டல் தொழில்நுட்பவியலாளர். | G.C.E. O/L, குறிப்பிட்ட துறையில் 3 வருட அனுபவம், வயது 20 - 25 | 28.03.2004 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# நீர் வளங்கள் போதியளவு இருந்தும் வினைத்திறனான பயன்பாடு எட்டவில்லை

யாழ்.குடாநாடு பரந்த நிலப்பரப்பையும், பல கடல்நீர் ஏரிகளையும், சிறு நன்னீர் நிலைகள் பலவற்றையும் கொண்ட ஒரு தீபகற்பகமாகும். இதன் மொத்தப் பரப்பளவானது 1129.9 சதுர கிலோ மீற்றர் ஆகும். இதன் நிலப்பரப்பானது 244 km நீளமான கடற்கரையால் சூழப்பட்டுள்ளது. இங்குள்ள கடல்நீர் ஏரிகளின் மொத்தப் பரப்பளவு 45.75 சதுர Km.

இத்துடன், 1000 இற்கும் மேற்பட்ட சிறு நனனீர் நிலைகளும் இங்கு பரவலாகக் காணப்படுகின்றன. இங்குள்ள மக்கள் தொகையில் பெருந்தொகையானவர்கள் நிரந்தர வேலைவாய்ப்பற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாறு யாழ்.குடாநாட்டில் நிலம், நீர், பௌதீக வளங்கள், தராளமாகக் காணப்படுகின்றபோதும், இந்த வளங்களின் வினைத்திறனான பயன்பாடு எட்டப்படவில்லை.

குடாநாட்டில் நீரில் வளர்ப்புக்கு பொருத்தமான 3 பாரிய கடல்நீரேரிகள் காணப்படுகின்றன. அவை தொண்டமனாற்றுக்கடல் நீரேரி. உடப்பாறு கடல் நீரேரி, யாழ்ப்பாணக் கடல் நீரேரி. இவை முறையே 30,10,128 சதுர மைல் பரப்பளவுகளைக் கொண்டவையாகும். இந்தக் கடல்நீர் பெருவளங்கள் இதுவரை கடலக மீன்பிடிக்கு மட்டுமே உட்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டின் பிரதான பொருளாதார நடவடிக்கையாக விவசாயம் இருந்து வருகின்றது. ஆனால், சனத்தொகை அதிகரிப்புடன் விவசாயத்திற்குரிய நிலப்பரப்பு குறைந்து வருகின்றது. இவ்வாறு சனத்தொகை அதிகரிக்கவும், உணவு உற்பத்திக்குப் பயன்படும் நிலத்தின் விஸ்தீரணம் குறையவும் நேரிடுவதால், இவர்களுக்கான உணவு உற்பத்தி குறைவடைகின்றது. இதனால், இங்கு வாழும் மக்களுக்கான உணவுத் தேவைகளுக்கு ஏனைய பிரதேசங்களில் தங்கியிருக்க வேண்டிய நிலை தொடர்ந்து வருகின்றது. இதனைத் தவிர்க்கவும், அதிகரிக்கும், சனத்தொகைக்கு போசாக்கு நிறைந்த உணவை வழங்கவும் கணிசமான தொகையினருக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கவும், எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் நாம் இதுவரை பயன்படுத்தாத நிலங்களையும் உவர் நீர் வளங்களையும் நன்னீர் வளங்களையும் சூழலுக்கு தாக்கம் ஏற்படாத வகையில் உச்சப் பயன்பாட்டுக்கு உட்படுத்துதல் ஆகிய நோக்கங்களைப் பூரணமாக நிறைவேற்ற, யாழ். குடாநாட்டில் அறிமுகம்செய்து விரிவுபடுத்த வேண்டிய துறைகளில் நீர்வளர்ப்பு மிகவும் முக்கியபங்கு வகிக்கின்றது.






நீர் வளமென்பது நீரில் வளரக்கூடிய தாவரங்களையும் விலங்குகளையும் தெரிவுசெய்து, அவற்றைக் கட்டுப்பாட்டு நிபந்தனையின் கீழ், கட்டுப்பாட்டு நீர்ச் சூழலில் செயற்கையாக அமைக்கப்பட்ட நீரத் தடாகங்களில் வளர்த்து அறுவடை செய்தலாகும்.

மிகவும் அண்மைக்காலம்வரை எமது பிரதான, மலிவான புரத உணவான மீன்- கடலில் இருந்தே பெறப்பட்டுவந்தது. எனினும், புரத உணவுக்கு ஏற்பட்டுள்ள கேள்விக்குத் தனியே கடலக மீன்பிடியிலிருந்து மாத்திரம் வழங்க முடியாத நிலையில் அதற்கான பிரதியீடாக நீரில் மீன் வளர்ப்பு உருவாக்கப்பட்டது. உருவாக்கப்பட்ட நீரில் வளர்ப்பில் மேலும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டதோடு அந்தத்துறை உலகெங்கும் ஒரு பெரும் பொருளாதார நடவடிக்கையாக உருப்பெற்றது.

இலங்கையில் நீரில் மீன் வளர்ப்பானது 1970 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலே அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், இந்தத்துறை இலங்கையின் சகலபாகங்களிலும் சமஅளவில் அபிவிருத்திசெய்யப்படவில்லை. இன்று புத்தளம் மாவட்டம் மட்டுமே நீரில் மீன் வளர்ப்பில் முனனணியிலுள்ளது. இலங்கையின் நீரில் மீன் வளர்ப்புக்கான சாத்தியத்தன்மைபற்றி ஆய்வு செய்த சமரநாயக்க என்பவர், யாழ்.குடாநாட்டின் தென் கரையோரமும், கிளிநொச்சி மாவட்டத்தின் வட கரையோரமும், இவற்றிற்கு இடைப்பட்ட கடல் நீரேரிப் பிரதேசமும் மிகப் பொருத்தமானது எனத் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் நீரில் மீன் வளர்ப்பானது 1973, 1974 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தொண்டமானாறு வெளிக்களநிலையத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்போது மன்னாரிலிருந்து பெறப்பட்ட பாலைமீன் **(Chanos chanos)** தொண்டமானாறு கடல் நீர் ஏரியில் விடப்பட்டன. இதன் பின்னர் 1990 ஆம் ஆண்டுவரை இந்தத் துறையில் பாரியமுன்னேற்றம் எதுவும் எட்டப்படவில்லை. ஆனால், 1990 ஆம் ஆண்டுகளிலிருந்து குருநகர் பகுதியில் பாலை மீன் வளர்ப்பு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆகவே, யாழ்.குடாநாட்டில் போதிய வளங்கள் இருந்தும், இன்னும் நீரில் மீன் வளர்ப்புத்துறை விருத்தியடையாமைக்கு மக்களிடையே காணப்படும் பிற்போக்கான சிந்தனை. (இந்தத் தொழில் தாழ்வாகக் கருதுதல்) இந்தத் துறைசார் அறிவும் ஆர்வமும் இன்மையுமே காரணங்களாகும். எனவே, மக்களிடையே முற்போக்குச் சிந்தனையும், ஆர்வமும் நீரில் மீன்வளர்ப்புத் தொடர்பான கல்வி அறிவும், அதனை தொடர்ந்து விரிவாக்கல் நடவடிக்கைகளும் அவசியமாகும்.

(தொடரும்)

## வாரம் ஒரு சிறு கைத்தொழில்

# மேசை, படங்களை துடைக்கும் பிரஷ்கள்

இந்த வகையான நார் பிரஷ்களை நீள் சதுரம், வட்டம் முதலிய வடிவங்களில் தயார் செய்யலாம்.

10 செ.மீ நீளம், 5 செ.மீ அகலம் 1.5 செ.மீ கனமுள்ள மரக்கட்டைகளைத் தேவையான அளவு தயார்செய்துகொள்ள வேண்டும். இதே போல, 6 செ.மீ குறுக்களவில் 1.5 செ.மீ கனமுள்ள கட்டைகளைத் தேவையான அளவு தயாரித்துக் கொள்ளவேண்டும்.

இந்தக் கட்டைகளின் மேல் மட்டத்தையும், சுற்றுப்பகுதியையும் வழுவழுப்பாக இழைத்துவிட்டு பின்னர் இழைக்கப்படாத மறுபக்கத்தில் பல துளைகளையிடவேண்டும்.

இழைக்கப்படாத மறுபக்கத்தில் சுற்றிலும் 0.5 செ.மீ இடம் விட்டு 4 மி.மீ கனத்தில் துளையிடவேண்டும். இதேபோல, வரிசையாக ஒரே அளவில் குறுக்கு வசத்தில் 5 துளைகள் போடவேண்டும். நீள வசத்தில் 10 துளைகள் போடவேண்டும். இதேபோல, இதே அளவல் கட்டை முழுவதும் துளையிட வேண்டும்.

இதுபோல், வட்டக் கட்டையிலும் 0.5 செ.மீ இடம்விட்டு உட்பகுதியில் 4 மி.மீ கனத்தில் 5 மி.மீ இடைவெளிவிட்டுப் பல துளைகள் போடவேண்டும்.

ஆனால், இந்தத் துளைகளை மிக ஆழமாகப் போடக்கூடாது. மரக்கட்டையின் பாதி அளவு வரைதான், துளை இறங்கி இருக்க வேண்டும். என்பதை மறந்துவிடக்கூடாது. இந்தவகையில், எல்லாக் கட்டைகளுக்கும் துளையிட்டு வைத்துக்கொள்ளவேண்டும்.

சுத்தமான வெண்ணிறமான கற்றாழை நாரை 4 செ.மீ நீளம் வைத்துத் துண்டித்து அவை கலந்துவிடாதபடி, அடுக்காக வைத்துக்கொள்ளவேண்டும். நாரை மரக்கட்டையில் இறக்க ஒரு தனிப்பட்ட இரும்பு ஆயுதம் தயாரித்துக் கொள்ளவேண்டும்.

இதற்கு 1 செ.மீ கனமுள்ள கம்பியைப் பயன்படுத்தலாம். இந்தக் கம்பி 8 செ.மீ நீளம் இருந்தால் போதுமானது.

இந்தக் கம்பியின் அடிப்பாகம் சுமார் 2 செ.மீ நீளத்திற்கு மூன்று மி.மீ கனம் வைத்து சரிவாக ராவிவிடவேண்டும். இதன் அடிமட்டத்தை துண்டு போல மழுக்கிவிடவேண்டும். இதன் நடுப்பாகத்தில் 1 மி.மீ கனம் 3 மி.மீ ஆழத்தில் ஒரு பள்ளம் செய்துவிட வேண்டும். இந்தக் கருவிதான் கட்டையிலுள்ள துளையில் நாரை அழுத்தப் பயன்படும்.

பார்சல் பெட்டிகளில் அடித்துவரும் பேல் தகடு என்னும் இரும்புத் தகட்டில் 18 மி.மீ அகலமுள்ளதாகவும், ஒரு மி.மீ கனமுள்ளதாகவும் பார்த்து வாங்கிவந்து, அதை 5 மி.மீ நீளம் 4 மி.மீ அகலமுள்ள பல துண்டுகளாக வெட்டி வைத்துக்கொள்ளவேண்டும்.

பிரஷ் தயாரிக்க ஆரம்பித்ததும் சுமார் 20 செ.மீ நீளம் 12 செ.மீ அகலம் 3 செ.மீ கனமுள்ள ஒரு கெட்டியான மரக் கட்டையை எதிரே போட்டுக்கொண்டு, துண்டித்த இரும்புத் தகடுகளை ஒரே தட்டில் போட்டு வலது கை அருகில் வைத்துக்கொண்டு வெட்டிய நாரை வலதுகைப் பக்கம் வைத்துக்கொண்டு, துளையிடப்பட்ட கட்டைகளை இடதுபக்கம் வைத்து, ஒரு சுத்தியலையும் நார் இறுக்கும் கருவியையும் எதிரே வைத்துக்கொண்டு நடுவே உட்கார்ந்து வேலையை ஆரம்பிக்கவேண்டும்.

முதலில் துளையிடப்பட்ட கட்டையில் ஒன்றை எடுத்து அருகிலுள்ள பெரிய கடடையின் மேல் துளை மேற்பக்கமாக இருக்கும்படி வைத்துக் கட்டையிலுள்ள துளையில் கொள்ளும் அளவிற்கு நாரை எடுத்து அதை ஒழுங்காக நெருக்கிக் கற்றையின் நடுப்பாகத்தை துளையின் மேல் வைத்து, நாரை இறக்கும் கருவியை எடுத்து, அதன் கீழ் பக்கமுள்ள பள்ளத்தில் இரும்புத் துண்டில் ஒன்றை இடம் வலமாக வைத்து தகடு செருக்கப்பட்ட கருவியை துளைமேல் வைத்திருக்கும் நாரின் மேல் துளைக்கு நேராகவைத்து சுத்தியலைக்கொண்டு அந்தக் கருவியை அடித்தால், இரும்புத் துண்டுடன் நார் துளையின் அடிமட்டத்தை முட்டியவுடன், அடிப்பதை நிறுத்திவிட்டு கருவியை மேலே தூக்கி எடுத்தால் இரும்புத்துண்டு நாரை அழுத்திப்பிடித்த நிலையில் கட்டையினுள் நின்றுவிடும். கருவி தனியே வந்துவிடும்.

இந்த சமயம் நார் துளையில் இறுக்கமாக இறங்கிவிட்டதால், அது கட்டையில் நிமிர்ந்த நிலையில் நிற்கும். இந்த விதமாக எல்லாத் துளையிலும் நாரை இறக்கிவிட்டு தனியே வைத்துவிட வேண்டும். நார் இறக்கும் வேலை முடிந்த பின் பெரிய பல் சீப்பைக்கொண்ட இந்த நாரை நன்றாகச் சீவிவிட்டு, கூர்மையான கத்தரியைக்கொண்டு நாரை ஒரே மட்டமாக வெட்டிவிடவேண்டும்.

இந்த வேலை முடிந்தபின் பிரஷ் கட்டையின் மேல் மட்டத்தையும், சுற்றுப்பகுதியையும் வார்னிஷ் கொண்டு பொலிஷ் பண்ணி வழுவழுப்பாகச் செய்துவிடவேண்டும்.

தேவையானால், ஏதாவது ஒரு பெயரை இதன் மேல் அச்சடித்து விடலாம். ஆழமாகயாக இருக்கும். அதன் பிறகு விற்பனைக்கு அனுப்பலாம். இந்தவகையான பிரஷ்களை வர்ண நாரைக்கொண்டு தயார் செய்யலாம்.

இந்தப் பிரஷ் கட்டைகளை நன்றாகத் தேய்த்து வழுவழுப்பாகச் செய்துவிட்டு - பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள், ஒரேஞ்சு வெள்ளை நிற எண்ணெய் வர்ணத்தை அடித்துவிட்டால் பிரஷ்கள் வெகு அழகாகத் தோன்றும். கறுப்பு பொலிஷ் கூடப் போடலாம். ஆழமாக இருக்கும்.

மேலே சொல்லப்பட்ட எல்லா விதமான பிரஷ்களையும் வெள்ளை, கறுப்பு நிறமுள்ள வெள்ளாட்டின் ரோமத்தைக் கொணடும் தயாரித்து விற்பனைக்கு அனுப்பலாம்.

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | சாவகச்சேரி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 20/= | 20/= | 20/= | 10/= | 15/= | 20/= | 10/= | 20/= |
| வெண்டிக்காய் | 15/= | 15/= | 15/= | 10/= | 20/= | 10/= | 30/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 45/= | 50/= | 60/= | 50/= | 60/= | 40/= | 40/ | 50/= |
| கத்தரிக்காய் | 20/= | 10/= | 20/= | 15/= | 20/= | 20/= | 10/= | 12/= |
| பாகற்காய் | 20/= | 25/= | 25/= | 20/= | 20/= | 20/= | 30/= | 20/= |
| கரட் | 30/= | 25/= | 25/= | 20/= | 30/= | 25/= | 10/= | 35/= |
| பீற்றூட் | 15/= | 10/= | 15/= | 10/= | 15/= | 15/= | 10/= | 12/= |
| முருங்கக்காய் | 120/= | 160/= | 160/= | 80/= | 130/= | 90/= | 100/= | 60/= |
| வெங்காயம் | 30/= | 20/= | 30/= | 20/= | 30/= | 28/= | 30/= | 30/= |
| பச்சை மிளகாய் | 25/= | 35/= | 30/= | 30/= | 30/= | 25/= | 25/= | 35/= |

நேர்காணல் செல்வா, லெஸ்லி

# ஒதுக்கப்பட்ட இனம் வாழமுடியும் ஒழிக்கப்பட்ட இனம் வாழமுடியாது


ஈழவேந்தன்

தேசிய ஏழுச்சிப்பேரவையின் கொள்கை முன்னெடுப்புச் செயலாளர் ஈழவேந்தனை இல. 60, கொழும்புத்துறை, புங்கங்குளம் வீதியில் அமைந்திருந்த அவரது வீட்டினில் சென்று சந்தித்து செவ்வி கண்டோம. அவருடனான செவ்வி இங்கே பிரசுரமாகின்றது.

கருணா வினுடைய துரோகத்தினை நினைக்கின்ற போது, எனக்கு மட்டுமல்ல எல்லாத் தமிழ் மக்களுக்கும் வேதனையை ஏற்படுத்தி இருக்கின்றது. டக்ளஸ் தேவானந்தா, ஆனந்தசங்கரி போன்றோரின் செயற்பாடுபோல் கருணாவின் செயற்பாடும் அமைந்துவிட்டது. அதாவது களத்தில் பாரிய வெற்றிகளுக்கு உறுதுணையாக நின்றவர்களில் ஒருவன் - விலைபோய் இருக்கிறான் என்றால் எங்களுக்கு வியப்பாக உள்ளது.

கருணாவினுடைய பிரச்சினை இன்று நிதானத்துடன் கையாளப்படவேண்டும். ஏனெனில், கிழக்கு நிலவரம் ஒரு ஆபத்தான நிலைமையில் காணப்படுகின்றது.

சிங்களக் குடியேற்றங்கள் ஒரு பக்கம், மறு பக்கம் முஸ்லிம்களின் கேள்விக்குறியான செயற்பாடுகளுக்கு மத்தியில், கிழக்கு மக்களை மனம்குழம்பாமல் பாதுகாக்க வேண்டிய கடமையுண்டு. சாதாரண மக்கள் ஒரேமாதிரி சிந்திப்பதில்லை. சில சமயங்களில் இந்தப் பிரச்சினையைக் கையாளும் விதம் மக்கள் மத்தியில் குழப்பங்களைத் தோற்றுவிக்கக் கூடும்.

பிரதேசவாதம் என்பது மிகவும் ஒரு ஆபத்தான புற்றுநோயாகும். ஆரம்ப காலங்களில் இருந்து இன்றுவரை சிங்களப் பேரினவாதிகள் கையாளும் உத்தியும் இதுவாகும்.

அதாவது, பிரித்தாளல், பிரித்தழித்தல் என்கின்ற உத்திமூலம், தமிழர்கள் தங்களுக்குள் சண்டையிட்டு அழிந்து போகவேண்டும் என்பதே சிங்களப் பேரினவாத அரசுகளின் எண்ணமாகும். இந்தச் செயலுக்குக் கருணா துணை போயுள்ளார். கருணாவினுடைய இந்தப் பிரதேசவாதம் என்கின்ற புற்றுநோய் - எம்மை அறியாமல், எமக்குள் வேரோடி வளர்ந்து, இறுதியில் பூதாகரமான பிரச்சினையாக உருவெடுக்க முன்னர் - முளையிலேயே கிள்ளி எறியக்கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இது ஒரு வகையில் மகிழ்ச்சியான விடயமாகும்.

கருணாவின் செயற்பாட்டுக்குப் பின்னால் வெளிநாட்டுத் தீயசக்திகள் உண்டென்பது தெரியவருகிறது. அது அமெரிக்காவாகவும் இருக்கலாம், இந்தியாவாகவும் இருக்கலாம். எதுவாக இருந்தாலும், கருணா இப்படிச் செயற்பட்டமைக்குக் காரணம் இந்தியச் சிந்தனை என்பதே எனது கருத்தாகும். எமது பிரச்சினையில் எவ்வாறு இந்தியாவின் சிந்தனை உள்ளது என்பது நோக்கவேண்டிய ஒன்றாகும்.

இந்திரா காந்தி காலகட்டத்துச் சிந்தனை வேறு, ராஜீவ் ஆட்சிக்கு வந்தபோது இருந்த சிந்தனை வேறு. இந்தியச் சிந்தனைகள் எந்த நிலையிலும் எம்மைச் சார்ந்ததாக இல்லை. ஈழம் அமையுமாயின் இந்திய அரசியல் அமைப்பின் யாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என்றே இந்தியா கருதுகின்றது.

நான் இந்தியாவில் இருந்தபோது, பல அரசியல் தலைவர்களைச் சந்தித்து உரையாடியுள்ளேன். எமது இனப்பிரச்சினை தொடர்பாக - அவர்களது சிந்தனை, குறிப்பாக வட இந்தியாவின் சிந்தனை - தற்கால அடிப்படையிலோ, வரலாற்று அடிப்படையிலோ கருத்துக்களைச் சொன்னாலும் எங்களைப் பொறுத்து நாடு பிரிந்து தனித்துவம் பெறுவதையும், குறைந்தளவு இணைப்பாட்சியின் மூலம் பெறப்படும் அதிகாரங்களாலும் சரி, இந்திய அரசியல் அமைப்பை மீறியதாக இருக்கக் கூடாது என்பதேயாகும்.

இங்கு விழப்புணர்வு பெற்று, போராட்டத்தின் மூலம் தமிழீழம் பெற்றுவிட்டால், அது தனக்கு அரசியல் அமைப்பில் பாதகத்தை ஏற்படுத்தும் என்று இந்தியா கருதியதோ, அன்றிலிருந்து சதிவேலைகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்த நாட்டிலுள்ள ஈழத் தமிழர்களின் வெற்றி - தமிழ் நாட்டின் ஒரு உணர்ச்சியைக் கொடுக்கும். அதற்காக அங்குள்ள தமிழர்கள் தமிழ் நாட்டையும் பிரித்துத் தரும்படி கோருவார்கள் என்று கூறுவது முட்டாள் தனமான' சிந்தனையாகும்.

நாம் வளர்ந்து வரக்கூடாது என்பதற்காக, இந்தியா பல காரணங்களைக் கொண்டு எம்மைச் சிதைக்கப்பார்க்கின்றது. ஒரு நாய்க்கு விசர்நாய் என்று முத்திரை குத்திவிட்டால், அந்த நாயைக் கொல்வது சுலபம். இந்தப் பார்வையிலேயே எம்மையும் இந்தியா பார்க்கின்றது. அடிக்கடி வெளிவிவகார அமைச்சர்கள் வந்து சென்றதும் டக்ளஸ் தேவானந்தா, ஆனந்தசங்கரி மற்றும் வரதராஜப்பெருமாள் ஆகியோரை அழைத்துக் கலந்துரையாடியதன் நோக்கம் - இங்கு சதி முயற்சிகளை மேற்கொள்வதற்கான முயற்சிகள் ஆகும்.

மக்கள் மதிக்க மறுப்பவர்களைத் தங்களுக்குச் சாதகமாக இந்தியா பயன்படுத்துகிறது. இதற்கு நல்ல உதாரணம் - வரதராஜப் பெருமாளை ஈழத்தின் ஒளி என ஓங்கி உச்சரித்து, இந்தியப்படை வெளியேறிய பின் அவரை இந்தியாவுக்கு அழைத்து, பங்களா கொடுத்து, பணம் செலவழிக்கின்றது. ஈழத்தைப்பற்றி உச்சரித்த வரதராஜப்பெருமாளை அழைத்த இந்தியா - அங்கிருந்து ஈழத்தைப் பற்றி உச்சரித்த ஈழவேந்தனை நாடுகடத்தியது. இது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் காணப்படும் இரட்டை வேடத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

இந்தியா நேர்மையான வழியில், காந்தியத்தில் ஊறிய ஒரு நாடு என்ற சிந்தனை எல்லாம் இன்று சிறகடிக்கப்பட்டு விட்டது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் நிரந்தரமான நண்பனும் இல்லை, நிரந்தரமான எதிரியும் இல்லை.

இந்தியாவின் சிந்தனை எதையும் செய்யும். கருணாவையும் மூளைச்சலவை செய்து, தனது சதி வலைக்குச் சாதமாகப் பயன்படுத்துகின்றது.

தேர்தலைப் பொறுத்தவரையில் எத்தனை பேர் வெற்றி பெறுகின்றார்கள் என்பதல்ல, எமக்கு எத்தனை விகிதாசார வாக்குகள் கிடைக்கின்றது என்பதே முக்கியமானதாகும். இது தேர்தல் அல்ல, மக்கள் கணிப்பீடு. இதை நாம் சர்வதேச உலகிற்கு வெளிப்படுத்த வேண்டும்.

தந்தை செல்வா உட்பட, ஆங்கிலச் சொல்லாட்சி படைத்த பொன்னம்பலம், அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம், வாழ்வகத்தைக் காத்த வன்னியசிங்கம், ஒருகாலத்தின் கொள்கையோடு இருந்த அமிர்தலிங்கம் வரை - வேகாத பேச்சுகளினை எவரும் பேசப்போவதில்லை.

நாம் பேசுவது வெறுமனே நாடாளுமன்றப் பதிவேட்டில் மட்டும் பதியப்படும். சிங்களப் பேரினவாதிகள் - எமது பேச்சில் மனம் மாறுவார்கள் என்பது மடத்தனம், எனவே, இந்த நாடாளுமன்றத் தேர்தல் எமக்கு ஒரு மக்கள் கணிப்பீடு என்பதை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தவேண்டும் என்பதே முக்கியமாகும். அதைவிட நாம் நாடாளுமன்றம் போகின்றோமா? இல்லையா? என்பதைவிட, யார் நாடாளுமன்றம் போகக்கூடாது என்பதுதான் முக்கியமாகும்.

இந்தத் தேர்தலில் ஈ.பி.டி.பியினர் மற்றும் ஆனந்தசங்கரியின் குழுவினர் - இராணுவப் பாதுகாப்போடு, குடாநாட்டில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவது மக்கள் மத்தியில் ஆதரவு இல்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

குடாநாட்டில் விடுதலைப் புலிகள் ஆயுத மற்ற நிலையில், அரசியற் பணிகளில் மட்டும் ஈடுபடுகின்றபோது, எதற்காக இவர்கள் இராணுவப் பாதுகாப்பைப் பெறவேண்டும். எனவே, இந்தச் செயற்பாடு கோடிட்டுக்காட்டுவது யாதெனில், இவர்களுக்குப் பின்னால் மக்கள் சக்தி ஒன்று இல்லை என்பதேயாகும்.

ஆனந்தசங்கரியின் அரசியல் பற்றி அனைவருக்கும் தெரியும். அவர் பல கட்சிகளில் அங்கம் வகித்தவர். 1977 ஆம் ஆண்டு சிறைப் பிடிக்கப்பட்ட ஜே.வி.பி - சிங்களக் கைதிகளை அக்கராஜன் குளத்தில் குடியேற்ற முற்பட்டவர். அன்றைய மக்களது எதிர்ப்பால் இந்த முயற்சி கைவிடப்பட்டது. இலங்கையில் தமிழ்ப்பகுதிகளை தமிழன், சிங்களவன் எனப் பிரித்துப் பார்க்கமுடியாது எனக்கூறிய இவரை, எவ்வாறு தமிழினம் நம்பமுடியும். எனவே, தமிழ் மக்களது அரசியலில் ஒரு அழுகு தொழுநோயாளியாக உள்ள ஆனந்தசங்கரி அப்புறப்படுத்தப்படவேண்டும்.

ஒதுக்கப்பட்ட இனம் வ்ாழமுடியும். ஆனால் ஒழிக்கப்பட்ட இனம் வாழமுடியாது. இதற்கு எதிராக நாம் போராடி, இராணுவரீதியில் மகத்தான வெற்றிகளைப் பெற்றுள்ளோம். இதனால் தான் இலங்கை அரசு எம்மிடம் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இன்றைய சூழலில் எமது அரசியல் பலத்தினை சர்வதேச அரங்கில் ஓங்கியொலிக்க, தமிழ் மக்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினை நாடாளுமன்றம் அனுப்பி, தமிழ் மக்கள் எல்லோரும் ஒரு அணியில் திரண்டு நிற்கின்றோம் என்பதை உலகத்திற்கு உணர்த்த அனைதது மக்களும் தமது வாக்குகளைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வழங்க வேண்டும் என்று முடித்தார். ◆

---

அரசியல் நோக்கு ச.வி.கிருபாகரன்

**ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் 60 ஆவது மனித உரிமை ஆணைக்குழுவில், சர்வதேச சர்வ-நம்பிக்கை என்ற அமைப்பின் சார்பாக சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் ச.வி. கிருபாகரன் (பொதுச் செயலாளா தமிழர் மனித உரிமைகள் மையம் பிரான்ஸ்) ஆற்றிய உரை.**

# தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற ஐ.நா. சபையின் முன்னெடுப்பு அவசியம்

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த டபிள்யூ. வில்சன் முதன் முதலாக 1918ம் ஆண்டு 'சுயநிர்ணய உரிமை' என்ற சொற்பதத்தை அமெரிக்க காங்கிரஸ் கூட்டங்களில் ஆற்றிய உரைகளில் பாவித்தார்.

வில்சன் கூறியதாவது, 'சுயநிர்ணய உரிமை' என்பது வெறும் பேச்சல்ல, இது ஓர் நடைமுறைக்கான அடிப்படைத் தத்துவம். இதை முன்னெடுத்துச் செல்லாது அலட்சியம் செய்யும் நாடுகள் ஆபத்தையே நோக்குவார்கள்.

சுயநிர்ணய உரிமை என்ற விடயம் சட்டரீதியாக மனித உரிமைகளுடன் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருந்தாலும் இன்றய காலகட்டத்தில் இது ஓர் அரசியல் பிரச்சினையாகவே நோக்கப்படுகிறது.

உலகில் சுயநிர்ணய உரிமைக்குத் தகுதி வாய்ந்த மக்கள், தமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தினை நடத்தும் பொழுது அவை யாவும் ஆயுத பலத்தால் கொடூரமான முறையில் நசுக்கப்படுகிறது.

சுயநிர்ணய உரிமையின் கடுமையான நியாயவாதியாக இருந்த அமெரிக்க ஜனாதிபதி அவ்வேளையில் கூறியதாவது, உலகில் ஜனநாயகம் காப்பாற்றப்படவேண்டும். ஆகையால் சமாதானம் என்பது அரசியல் சுதந்திரத்தின் அடிப்படையிலேயே காணப்படுகிறது.

சுயநிர்ணய உரிமை மிகவும் தெளிவாக ஐக்கிய நாடுகள் சபையின் சட்டங்கள், சாசனங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மனித உரிமை மீறல்களை நாம் இவ் ஆணைக்குழுவில் நீண்டகாலமாக கேட்டு வருகிறோம். இவை யாவும் தமிழ்மக்கள் தமது நியாயமான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை முன்வைத்ததிற்கு எதிராக சிறிலங்கா அரசின் கொடூரமான போக்கே காரணம்.

சர்வதேச சட்டங்களின் பிரகாரம் சுயநிர்ணய உரிமை என்பது மக்களுக்கு உரியது. தனிப்பட்ட குழுவிற்கோ அல்லது நபருக்கோ உரியதல்ல.

இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் ஓர் நீண்ட சரித்திரத்தை, கலாசாரத்தை, தமக்கான ஒரு மொழியை, அத்துடன் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளைக் கொண்ட ஓர் தாயக பூமியைக் கொண்டவர்கள். ஆனால், இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து (1948) அரசியல் சாசனத்திலிருந்த பாதுகாப்புக்களையும் இழந்து, 'தமிழர்' என்ற அடையாளத்தையும் இழக்கத் தொடங்கியுள்ளனர்.

இலங்கையின் 1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம், சிங்கள-தமிழ் அரசியல் தலைவர்களுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட இரு ஒப்பந்தங்கள் (1957, 1965) கைச்சாத்திட்ட சிங்களப் பிரதமர்களாலேயே கிழித்தெறியப்பட்டன.

1972 ஆம் ஆண்டு கல்வி தரப்படுத்தல், அத்துடன் நடைபெற்ற பல இனக்கலவரங்கள் யாவும் - அவ்வேளையில் தமிழ் மக்கள் சாத்வீகமான முறையிலேயே எதிர்த்து போராடினார்கள். ஓர் புத்திஜீவியின் அறிக்கையின்படி, தமிழர்களின் தாயக பூமியில் 50 வீதமான பிரதேசங்கள் இலங்கை அரசினால் திட்டமிடப்பட்டு, சிங்களவர்களினால் அபகரிக்கப் பட்டுள்ளது.

தமிழர்களுடைய முப்பது வருடகால சாத்வீகப் போராட்டங்கள் அரச படைகளினால் வன்முறைமூலம் நசுக்கப்பட்டது. தமிழர்களுடைய சாத்வீகப் போராட்டங்கள் எந்தவிதத்திலும் பயனற்றுப்போன வேளையில், தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாக்க வேண்டியநிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இது தமிழீழ விடுதலைப் புலிகளின் தோற்றத்துக்கும், ஆயுதப் போராட்டத்துக்குமான உணர்வுகளை தமிழ் மக்களுக்குக் கொடுத்தன.

கடந்த இருபது வருடகாலமாக சிறு சிறு இடைநிறுத்தங்களுடனும், இரத்தக்களரிகளுடன் யுத்தம் நடைபெற்றது.

கைது, சித்திரவதை, பாலியல் வல்லுறவு, கொலை, இடப்பெயர்வுகள், வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் போன்றவை தமிழ்மக்களின் சோக வாழ்வாகியது.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைத்தீவின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மூன்றில் இரண்டு பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகம் நடைபெறுகிறது.

நோர்வே அரசின் முன்னெடுப் புக்களினால் 2 ஆம் ஆண்டு பெப்ரவரியிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசிற்கும் இடையில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற பொழுதும், இவற்றில் இணக்கம் கண்டவற்றை அரசு நடைமுறைப்படுத்தத் தவறிய காரணத்தால், தமிழீழ விடுதலைப் புலிகள் தாம் தற்காலிகமாக பேச்சுவார்த்தைகளிலிருந்து இடைநிறுத்திக் கொள்வதாக அறிவித்துள்ளனர்.

கடந்த நவம்பர் முதலாம் திகதி, தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு- கிழக்குக்கான இடைக்கால நிர்வாகத் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தனர். இந்தத் தீர்வுத் திட்டத்தை ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மற்றும் வேறு பல நாடுகளும் வரவேற்றிருந்தனர்.

ஆனால், நவம்பர் நாலாம் திகதி ஜனாதிபதி சந்திரிகா மூன்று அமைச்சுப் பொறுப்புக்களைத் தன்வசம் எடுத்துக் கொண்டதிலிருந்து - அரசியல் சச்சரவுகள் அரசுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட ஆரம்பித்தது. இறுதியில் நாடாளுமன்றமும் கலைக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன் வைக்கப்பட்ட தீர்வுத் திட்டம், ஆட்சியில் உள்ளவர்களினால் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

இலங்கையில் இது ஓர் கவலைக்குரிய விடயம். ஒவ்வொரு வேளையிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு கிட்டக்கூடிய சூழ்நிலை ஏற்படும்பொழுது, ஆட்சி செலுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் முரண்பட்டு குழப்பிவிடுவார்கள்.

இதனைச் சர்வதேச சமூகம் அமைதியாக கவனித்துக் கொண்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் - இந்த ஆணைக்குழுவின் 55 ஆவது கூட்டத்தொடரில் (1999) பேசும்பொழுது கூறியதாவது - 'இந்த ஐ.நா. சபை, அரசாங்கங்களின் அங்கத்துவத்தை கொண்டபொழுதும், மக்களைப் பாதுகாப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. நான் இப்பதவியில் இருக்கும் வரை மக்களுக்கே எமது செயற்பாடுகளில் முக்கியத்துவம் கொடுப்பேன்.

நாட்டின் ஒருமைப்பாடு என்ற பெயரில் மக்களின் அடிப்படை சுதந்திரங்களை, எந்த அரசாங்கங்களும் மீறமுடியாது. ஒருவர் பெரும்பான்மையாக இருந்தால் என்ன, சிறுபான்மையாக இருந்தால் என்ன அவருடைய அடிப்படை சுதந்திரமும், மனித உரிமைகளும் என்றும் பாதுகாக்கப்படும்.'

தலைவர் அவர்களே - எத்தனையோ இனப்பிரச்சனைகள் ஐக்கிய நாடுகள்சபையின் முன்னேற்பாடுகளினால் தீர்க்கப்பட்டுள்ளது. இவ் ஆணைக்குழு இவ் விடயங்களில் பெரும் பங்கும் வகித்துள்ளன.

இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை மீண்டும் அடைவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் முன்னெடுப்புக்கள் அவசியம் எனக் கூற விரும்புகிறேன் எனத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதுஒன்றும்*
*தீமை இல்லாத சொலல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## முன்னாள் அமெரிக்கத் தூதரின் சமாதான விரோதப் பேச்சு..

அண்மையில் இலங்கையின் முன்னாள் வெயியுறவு அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகரும் தற்போதைய காபந்து அரசில் வெகுசனத் தொடர்பூடகத் துறையைப் பொறுப்பேற்று பிரசார நடவடிக்கைகளை தமிழினத்தை குழப்பும் வகையில் விஷமத்தனமாக நெறிப்படுத்தி வருபவருமான லக்ஷ்மன் கதிர்காமர் பயங்கரவாதத்தை அழிக்கும் நடவடிக்கைக்கு அமெரிக்கா தலைமை தாங்க வேண்டுமென ஒரு பகிரங்க அழைப்பை விடுத்திருந்தார். கதிர்காமரின் இந்தக் கூக்குரலின் பின்னணியில் என்ன இருக்கிறது என்பதை சொல்லி விளக்க வேண்டிய நிலையில் தமிழ் மக்கள் விபரம் தெரியாதவர்களல்ல.

சில மாதங்களுக்கு முன்னர் இதே தொனியுடன் கூடிய அழைப்பொன்றுடன் இந்தியாவின் டில்லிக்கும் அடிக்கடி பறந்து சென்று அறிவுறுத்தலுடன் கூடிய ஆலோசனைகளை அங்குள்ள அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுக்குக் கூறியபோதும் அவர் இவரது ஆலோசகத்தனத்தை அங்கீகரித்து அக்கறைப்படுத்தாத நிலையில் அமெரிக்காவுக்கான அழைப்பை விடுத்திருந்தார்.

அவரது அழைப்பின் உள்நோக்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைளை மேற்கொள்வதே ஆகும். அதற்கு இந்தியாவையும், அமெரிக்காவையும் பயன்படுத்தவும், அதன் மூலம் தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் தேர்தலின்பின் தொடரும் நிலை ஏற்படும்போது விடுதலைப்புலிகள் தற்போதைய பலமான நிலையில் தொடர்ந்தும் பங்குகொள்ள முடியாதவாறு அவர்கள் மூலம் தொடர்ந்தும் அழுத்தங்களைப் பிரயோகிக்கவைக்கவும் கதிர்காமர் வியூகமமைக்கிறார் என்றால் அது மிகையல்ல.

ஏற்கனவே ஜனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளை தனது கூட்டணிக்கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்க நேரிட்டால் தொடரப் போவதாகக் கூறிவந்தாலும் கூட அதற்கு புதிதாக சில மறைமுக நிபந்தனைகளையும் மாற்று யோசனைகளையும் முன் வைக்கும் திட்டத்துடன் உள்ளதையும் வெளிப்ப டுத்திவரும் நிலையில் கதிர்காமரின் அழைப்பின் நோக்கத்தை மதிப்பிடல் வேண்டியது அவசியமாகும்.

கதிர்காமர் அழைப்பு விடுத்த சில தினங்களிலே.. பண்டாரநாயக்க சர்வதேச கற்கை நெறிகளுக்கான மண்டபத்தில் நடந்த தென்னாசியப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் பங்களிப்பு என்ற இருநாள் செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவரும் ஐ.நா சபைக் கான பிரதித்தூதுவருமான பீற்றர் பேர்லித் விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தி பலவீனப் படுத்தும் முயற்சியில் அமெரிக்கா தீவிரமாக செயற்பட்டு வருவதாகவும் இதற்கான சர்வதேச முயற்சிகளுக்கு அமெரிக்கா தலைமை தாங்குவதாகவும் தெரிவித்துள்ள மையானது கதிர்காமர் போன்றோருக்கு இனிப்பான செய்தியாக இருக்கலாம்.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அமெரிக்கா தனது சுயத்தை வெளிப்படுத்துவதாகக் காட்டியுள்ளது என்றே கூறமுடியும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பேரினவாத அரசுகள் தமிழ்மக்களுக்கு எதிரான கொடுமையான யுத்தத்தினை பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்றும் சமா தானத்திற்கெதிரான யுத்தம் என்றும் பொய்ப்பிரசாரங்களை சர்வதேசமட்டத்தில் மேற்கொண்டபடி நடத்திய போதிலும் அமெரிக்கா நேரடியாகவும் தனது ஆதரவு நாடுகளூடாகவும் இராணுவரீதியிலும் ஆயுத ரீதியிலும் பெருமளவுக்கு உதவி, சிங்களபேரின வாதத்தின் தமிழின அழிப்பு நடவடிக்கைக்கு பரிபூரணமான ஆசீர்வாதம் வழங்கியதை தமிழ் மக்கள் நன்கு அறிந்தே உள்ளனர்.

எனவே அமெரிக்க முன்னாள் தூதரின் இந்த அறிவிப்பு தமிழ் மக்களுக்கு புதியன ஒன்றுமேயல்ல.

சட்டியில் இருந்தது அகப்பையில் வந்துள்ளது. அவ்வளவுதான். அமெரிக்கா இதற்கு முன்னரும் விடுதலைப்புலிகளுக்கும் பயங்கரவாதத்திற்கும் எதிரான நடவடிக்கை என்ற பெயரில் மேற்கொண்ட சர்வதேச பொலிஸ்காரத்தனமான நடவடிக்கை தமிழ் மக்களுக்கு தற்காலிக பின்னடைவுகளை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் அவர்களைத் தனிமைப்படுத்தியதோ பலவீனப்படுத்தியதோ கிடையாது.

மாறாக இம்மாதிரியான செயற்பாடுகள் மூலம் விடுதலைப்புலிகளும் தமிழ் மக்களும் காலத்திற்குக் காலம் பலம் பெற்றே வந்திருக்கின்றனர்.

அதனால் தான் இன்று விடுதலைப்புலிகளை தனிமைப்படுத்தவும் முனைப்புடன் செயற்படுவதாகக் கூறும் அமெரிக்கா, சமாதானத்தை வலியுறுத்துவதாகக் கூறிக் கொண்டு பேச்சுவார்த்தைகளின் பின்னணியில் உள்ள நாடுகளின் ஊடாக வாஷிங்டன் மாநாடு எனப்பல பொறிகளை வைத்த போதும் விடுதலைப்புலிகள் அதனை தொலைநோக்கு சிந்தனையுடன், தவிர்த்து தம்மையும் தமிழ் மக்களையும் காப்பாற்றினர் என்பது சமகால வரலாற்றுப் பதிவுகள் கூறும் உண்மையாகும்.

விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்துவதோ, தனிமைப்படுத்துவதோ சமாதானத்தைப் பாதிக்கும். அதற்கு எதிரான தமிழின விரோத செயற்பாடாகவே கருதப்படும் என்பதை அந்த முன்னாள் அமெரிக்கத் தூதர் புரிந்துகொள்வது நல்லது.

# நாடும் நடப்பும்




செய்தி : தமிழ் மக்களை குழப்பும், அவர்களின் ஒருமைப்பாட்டைச் சிதைக்கும் வகையில் அரசசார்பு ஊடகங்கள் திட்டமிட்டு பிரசாரங்களை மேற்கொள்கின்றன.

## இலத்திரனியல் ஊடகங்களில்
# கட்சிகளின் தேர்தல் பிரசாரங்களை 29 ஆம் திகதியுடன் நிறுத்தவும்
## தேர்தல் ஆணையாளர் கோரிக்கை

நாடாளுமன்ற பொதுத்தேர்தல் தொடர்பான அனைத்துப் பிரசாரங்களையும், இலத்திரனியல் ஊடகங்கள் 29 ஆம் திகதியுடன் நிறுத்தவேண்டும் என, தேர்தல் ஆணையாளர் தயாணந்த திஸநாயக்க ஊடகங்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே, தேர்தல் ஆணையாளர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

தேர்தல் நடைபெறுவதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் இலத்திரனியல் ஊடகங்கள் தமது தேர்தல் பிரசாரங்களை நிறுத்தவேண்டும். அதேபோல், அச்சு ஊடகங்கள் 24 மணித்தியாலங்களுக்கு முன்பு, பிரசாரம் தொடர்பாக ஆதரவு தேடும் தகவல்களை உள்ளடக்குவதைத் தவிர்க்க வேண்டும். இதேவேளை, ஜனாதிபதியோ, பிரதமரோ வெளியிடும் எந்த அறிக்கையையும் 29 ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தல் முடிவு வெளியாகும்வரை பிரசுரிக்கக்கூடாது.

தேர்தல் பிரசாரங்கள் திரிவுபடுத்தப்படக்கூடாது. குற்றஞ் சுமத்தப்பட்ட ஒரு செய்தி ஒலிபரப்பானால், இதற்கு மாற்றாக குற்றஞ்சாட்டப்பட்டவரும், வெளியிடும் செய்தியும் ஊடகங்களில் ஒலிபரப்பாக வேண்டும். இனிவரும் காலங்களில் எந்த ஊடகங்களும் செய்திகளைத் திரிபுபடுத்திக் கூறுவதைத் தவிர்க்கவேண்டும்.

அரசாங்க ஊடகங்கள் சில செய்திகளைத் திரிவுபடுத்துவதால், பிணக்குகள் ஏற்படுகின்றன. ஊடகத்துறையிலுள்ள சட்டங்களின் குறைந்த நடவடிக்கையே இதற்குக் காரணம்.

தேர்தல் சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் நடத்துவது, யாருக்காக என்பதை வாக்காளர் அறியவேண்டும். 1963 ஆம் ஆண்டு நகரசபைத் தேர்தலுக்குப் பின்னர் தாம் எந்தவொரு தேர்தலிலும் வாக்களிக்கவில்லை. இந்தநாட்டில் இருக்கின்ற அரசியற்கட்சிகள் தொடர்பில், இணக்கம் இன்மையே இதற்கான காரணமாகும். எவ்வாறாயினும், எதிர்வரும் தேர்தலில் மக்கள் அனைவரும் வாக்களிக்கவேண்டும் எனத் தேர்தல் ஆணையாளர் கேட்டுக்கொண்டார்.

## வாக்கு எண்ணும் அலுவலர்களுக்கு அடுத்தவாரம் செயலகத்தில் பயிற்சி

ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில், வாக்கெண்ணும் அதிகாரிகள், அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரினால், அடுத்தவார முற்பகுதியில் யாழ். செயலகத்தில் நடத்தப்படவுள்ளது.

வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து கொண்டு வரப்படும் வாக்குகளை எண்ணுவதற்காக ஒரு வாக்கெடுப்பு நிலையத்திற்கு ஒரு பிரதம வாக்கெண்ணும் உத்தியோகத்தரும், ஐந்து உதவிவாக்கெண்ணும் உத்தியோகத்தரும், 20 சாதாரண வாக்கொண்ணும் உத்தியோகத்தர்களும் கடமையில் ஈடுபடவுள்ளனர். இதற்கமைய வாக்கெண்ணும் பணிகளில் சுமார் 600 அலுவலர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

## முஸ்லிம் பெண்கள் வாக்களிக்க 46 மகளிர் வாக்களிப்பு நிலையங்கள்

'மட்டக்களப்பு மாவட்டத்தில் - 35,387 முஸ்லிம் பெண்கள் வாக்களிப்பு செய்வதற்காக 46 மகளிர் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு கின்றது. மட்டக்களப்பு தொகுதியில் 27 மகளிர் வாக்களிப்பு நிலையங்களும், கல்குடா தொகுதியில் 19 மகளிர் வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

ஏறாவூர் பிரதேசத்தில் 13 மகளிர் வாக்களிப்பு நிலையங்களும், காத்தான்குடி பிரதேசத்தில் 14 மகளிர் வாக்களிப்பு நிலை யங்களும் அமைக்கப்படவுள்ளன. கல்குடா தொகுதியில் பொரளை மத்திய பிரதேசத்தில் 11 மகளிர் வாக்களிப்பு நிலையங்களும், ஓட்டமாவடி பிரதேசத்தில் 8 மகளிர் வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. மகளிர் வாக்களிப்பு நிலையங்களில் பெண் அரசாங்க ஊழியர்களே சேவையில் ஈடுபடுத் தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## பாடசாலை - கல்வி அலுவலக சிற்றூழியர்கள் கடமை நேரத்தில் சீருடையில் பணியாற்ற உத்தரவு!

பாடசாலைகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பணியாற்றும் சிற்றூழியர்கள் கடமை நேரத்தில், தமக்குரிய சீருடையில் பணியாற்ற வேண்டும் என, கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் கண்டிப்பான உத்தரவொன்றை பிறப்பித்துள்ளார்.

வருடாந்தம் சிற்றூழியர்களின் சீருடைக்காக இலட்சக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்படுகின்றன. ஆனால், ஊழியர்கள் சீருடைக்கான பணத்தைப் பெற்றுக்கொண்டு, உரிய சீருடை அணியாது, கடமையாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அலுவலகங்கள், பாடசாலைகளில் கடமையாற்றும் சிற்றூழியர்கள் சீருடை அணியாது கடமையாற்றுவதால் ஏனைய ஊழியர்களையும், இவர்களையும் இனங்காண்பது சிரமான காரியமாக உள்ளதாகவும் தியாகலிங்கம் மேலும் தெரிவிததார்.

## வாக்காளர்களின் நன்மை கருதி
# புலிகள் பகுதி காவலரண் பின் நகர்த்த இணக்கம்

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களைச் சேர்ந்த வாக்காளர்களின் நன்மை கருதி, தமது பாதுகாப்பு முன் அரங்கிலிருந்து பின்வாங்கப்போவதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாக 'பவ்ரல்' அமைப்பின் செயலாளர் ஜெகான் பெரேரா தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் தேர்தல் நடவடிக்கைகள், தற்போது தேர்தல் தொடர்பான செயற்பாடுகள் குறித்து, கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர்களின் மாநாட்டிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - விடுதலைப் புலிகள் இதற்காகப் பாதுகாப்பு முன் அரங்கில் இருந்து, 500 மீற்றர் தூரத்துக்கோ, தேவையேறபடின் 1000 மீற்றர் தூரத்துககோ பின் வாங்குவதற்குத் தயாராக இருக்கின்றார்கள்.

மேலும், தாம் பின்வாங்கிய நிலைகளுக்குப் பொலிஸார் ஆயுதங்களுடன் செல்வதற்கான அனுமதியையும் அவர்கள் வழங்கியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

திறந்த மடல்

யோ.திருவள்ளுவர்.

# தமிழகத்திலிருந்து கருணாவுக்கு ஒரு கடிதம்

**கிழக்கு நிலவரங்களை அறிந்துகொண்ட தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழன் ஒருவன் கருணாவிற்கு எழுதிய கடிதம் இங்கே பிரசுரமாகின்றது**

அன்பு கருணா அவர்களுக்கு,

தமிழகத்து தமிழனின் வணக்கம். இந்தச் செய்தி தாங்கி வரும் என் கடிதம் பல லட்சம் தமிழர்களின் உணர்வலைகள். ஈழத்தமிழர்களின் போராட்டவரலாற்றை என் 13 வயது முதல் கவனமாக அறிந்து வருகிற எனக்கு, உங்களது கடந்தகால வீரம் செறிந்த வரலாறு வியக்கவைத்தது உண்மை. கடந்த காலத்தில் நீங்கள் ஒரு இலட்சியம் மிக்க போர்வீரன் என்பதை யாரும் மறக்கவோ, மறுக்கவோ இயலாது. இந்த மாதம் இடியென வந்த உங்கள் செய்திகளைப் படித்து வேதனை கொண்டவர்களில் நானும் ஒருவன் என்பதால், இந்தக் கடிதம் உங்களுக்கு -

ஈழத்துப் போராட்டங்களில் நேரடியாக எந்தப் பங்கும ஆற்றாதவன் என்ற நிலையில் நின்று, உங்கள் இந்த பிரதேசவாதத்தை பார்க்கும்போது, எனக்கு உங்களிடம் சில கேள்விகள் எழுகிறது. தமிழீழம் என்ற வரையறுக்கப்பட்ட எல்லையை (தாகத்தை) மீட்டெடுக்கவே இது வரை போராட்டங்களில் பல ஆயிரம் பொதுமக்களும், போராளிகளும் உயிரைத்தியாகம் செய்தார்கள். அவர்கள் மட்டும் ஊர், பிரதேசம், மாவட்டம், வட்டம் எனப் பிரிந்து போயிருந்தால் இன்று நீங்களும் பாதுகாப்பற்று அலைந்திருப்பீர்கள் அல்லது கல்லறையில் கருக்கப்பட்டிருப்பீர்கள். இதைத் தெரிந்தும் ஒன்றும் அறியாத விடலைப்பொடியன்போல, ஒரு போராளியாய் இருந்த நீங்கள் கிணறு வெட்டப் புறப்பட்ட பூதமாய் மாறிய இரகசியம் என்ன?

உங்கள் பேட்டிகளில் படித்த விடயங்கள் சில சம்மந்தமான சில கேள்விகள் -

1) வன்னிக்கு 1000 வீரர்களை அனுப்ப தலைமை கேட்டதாகவும், அந்த போராளிகளை பலிகொடுக்காமல் காப்பாற்றவும் வேண்டி இந்த முடிவு எடுத்ததாகச் சொல்லியிருக்கிறீர்கள். இது உண்மை என்றால் எதற்கு ஒரு உப்புச்சப்பில்லாத, உழுத்துப்போன பிரதேசவாதம் தேவைப்படுகிறது உங்களுக்கு? போராட்ட களத்தில் பணிகளை, அதன் தேவைகளுக்கு ஏற்ற தந்திரமாக நகர்த்துவதில் தான் வெற்றியிருக்கிறது என்பதை அறியாத அப்பாவியில்லை நீங்கள். எதுவாக இருந்தாலும் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதுதான் ஒரு படையணியின் ஒழுக்கம்.

தலைமை உங்களை விசாரிக்க அழைத்ததன் பேரில ஏற்பட்ட உயிர்ப்பயம்தான் - இன்று நீங்கள் விளையாடும் இந்தச் சறுக்கல்கள் என்பது உங்களுக்கும், உங்கள் நெருக்கமானவர்களுக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே தெரிந்த இரகசியம். போராளிக்கு இருக்கக்கூடாத உயிர்ப்பயம் உங்களில் முளைவிட என்ன காரணம்.

2) தமிழீழத் தேசியத் தலைமை அதிகாரத்தை பிரித்துக் கொடுக்காமல், தான் இடும் கட்டளைகளை செயல்படுத்துவதாக கூறியிருக்கிறீர்கள். இதுதான் ஒரு போராட்ட வரலாற்றில் மிக பாதுகாப்பான தந்திரோபாயங்களை தரவல்லது என்பது உங்களுக்கே தெரியும். நீங்கள் இருப்பது ஒரு விடுதலை பெற்ற சூழல் இல்லை என்பதை மறந்து விட்டீர்களா?

உங்களுடைய கட்டுப்பாட்டிலிருக்கும் போராளிகளுக்கு கட்டளை பிறப்பிப்பது நீங்கள் தானே? அவர்களது கருத்துக்களுக்கு மதிப்புப் கொடுக்காமல்தானே நீங்கள் அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறீர்கள் அதன் இரகசியம் என்ன என்பது உங்களுக்கு மட்டுமா தெரியும்?

3) உளவுப்பிரிவுப் பொறுப்பாளர், காவல்துறைப் பொறுப்பாளர், நிதிப்பொறுப்பாளர் மூவரையும் நீக்கம் செய்யக் கோரிக்கை வைத்துள்ளீர்கள். ஒரேயொரு கேள்வி - எதற்காக இவர்களைப் பார்த்து அச்சம் கொள்கிறீர்கள். உங்கள் மடியில் கனமில்லை என்றால், எதற்கு இந்தப் பயம். பயம் கலந்த சிறுபிள்ளைத்தனமான கோரிக்கைகள்?

4) ஆயுதங்களை பி.பி.சி நிருபருக்குக் காட்டுவதற்காக, முகாமை நீங்கள் திறந்தது உங்களது இயலாமையையும், பரிதாபம் கலந்த பய உணர்வையும் எதிரிக்குக் காட்டியிருக்கிறது. உங்களை கடந்தகால புகைப்படத்தில் பார்க்கும் போதெல்லாம் ஒரு கம்பீரம் தெரியும். இப்போதைய பி.பி.சி புகைப்படத்தைப் பார்த்தபோது ஒரு குறுநரியின் நடையாகின்றது.

5) நேர்காணலொன்றில், பல வரலாறுகளைப் படித்ததாகச் சொல்லியிருந்தீர்கள். கியூபாவின் விடுதலைப் போராட்டத்தையும், அதில் பிடல்காஸ்ட்ரே, செகுவேரா இவர்களது அளவு கடந்த பற்றுறுதியையும், நட்பையும் ஒருமுறை படியுங்கள். கல்நெஞ்சம் கொண்டாலும், நீங்கள் உண்மை போராளி என்றால் உங்கள் செயலுக்கு கண்ணீர் விடுவீர்கள்.

உங்களது இந்த தரம் தாழ்ந்த செயலால் பாதிப்பு பல இலட்சம் தமிழ் மக்களுக்கு. நீங்கள் உங்கள் நிலையை உணர்ந்து மாற்றிக்கொள்ளா விட்டால், உங்களது தலைமுறைக்கும் இதன் பழி வந்து சேரும். தலைமுறை எல்லாம் தலைகவிழ்ந்து நடப்பது தான் மானம்மிகு போராளிக்கு அழகா? இன்று அருகில் இருந்து ஆதரவு தரும் வல்லமைமிக்க உங்களது புதிய நண்பர்கள் - உங்களைவிட நல்ல இடம் கிடைத்ததும், உங்களை முதல் பலிகொடுப்பார்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

கடைசியாக, எனது சிறிய ஆலோசனை - உங்களை இந்த சிக்கலிலிருந்து விடுவித்துக் கொள்ள,' பொது மன்னிப்பை ஏற்று, விசாரணைக்கு உட்பட்டு நயமாக நடந்துகொள்ளுங்கள். தமிழ் மக்கள் உங்களது உயிரையும், மிஞ்சியிருக்கும் மானத்தையும் காப்பாற்றுவார்கள்.'

துரோகி என்ற பட்டம் சுமந்து, வசதியாக வேதனையில் வாழ்வதைவிட, திருந்தி மன்னிக்கப்பட்டவன் என்பது மேலான இடம். தமிழீழ தேசத்தில் மன்னிப்பு என்ற ஓர் அத்தியாயத்தைத் துவக்கி வையுங்கள். அதில் புடம் போடப்படும் முதல் போராளியாக. இல்லையேல் துரோகி என்ற இழிச்சொல் சுமந்து, உங்களது குடும்பம் - தலைமுறையை பழிச்சொல்லுக்கு இரையாக்குங்கள். முடிவு உங்களிடம். வரலாற்றில் நீங்கள் எந்தப் பக்கத்தில் என்பது உங்களது இப்போதைய முடிவுதான் தீர்மானிக்கும்.

## அகதி வாழ்வின் அவலங்கள் பகுதி XXXV

- சிவா சின்னப்பொடி

# கடத்தல் காரர்களிடம் முன்பள்ளி சிறுவர்கள்

பிரான்ஸ், ஜேர்மனி, சுவீஸ் போன்ற பல ஐரோப்பிய நாடுகளில் மூன்று வயதில் குழந்தைகளை முன்பள்ளியில் சேர்க்கும் வழக்கம் இருந்து வருகின்றது.

இந்த மூன்று வயதிலிருந்து 4 வயதுவரை குழந்தைகளுக்கு தங்களது கடமைகளைத் தாங்களே செய்யப் பழகுவது, அதாவது மலசலம் கழிப்பது, பல் துலக்குவது, சாப்பிடுவது, உடையணிவது, சப்பாத்து போட்டு லேஸ் கட்டுவது முதற்கொண்டு அனைத்து நாளாந்தக் கடமைகளையும் செய்யப் பழக்குவதுதான் - முன்பள்ளி ஆசிரியை, ஆசிரியர்கள் செய்யும் வேலையாகும்.

அவ்வப்போது கலர் பென்சில்கள் மூலம் கொப்பியில் குழந்தைகள் விரும்பிய கிறுக்கல்களைச் செய்யவும் அனுமதிப்பது வழக்கம்.

4 வயதிலிருந்து 5 வயது வரை நிறங்களை இனம் காண்பது, ஒலி வேறுபாட்டை இனங்காண்பது, எழுத்துக்களை இனம் காண்பது, இலக்கங்களை இனங்காண்பது, படங்களை இனங்காண்பது, கட்டடங்களை அடுக்கி உருவங்கள் செய்வது, எழுத்துக்களை அடுக்கி சிறு சொற்களை உருவாக்கப் பழகுவது, படம் வரைவது, பாட்டுப் பாடுவது, ஓடி விளையாடுவதும் என்று ஒரு பரந்த வேலைத்திட்டம் இருக்கும்.

5 வயது முதல் 6 வயது வரை கோடுகள், வட்டங்கள், சதுரங்கள் வரைவது. இந்த வட்டங்கள், கோடுகள், சதுரங்களின் அடிப்படையில் எப்படி எழுத்துக்களை எழுதுவது என்று பழக்குவது சில பொருட்களைச் சேர்த்தும், பிரித்தும் கணக்குகளைச் செய்யப் பழக்குவது.

உருவங்களை வரைந்து வர்ணம் தீட்டப் பழக்குவது, இசையோடு பாடல்களைப் பாடப் பழக்குவது நடைமுறையாகும். பிள்ளையின் 6 ஆவது வயதில்தான் பிள்ளைக்கு இலக்கணப்படி வாக்கியங்கள் அமைக்கவும், சிறு சிறு வசனங்கள், சொற்கள் எழுதவும் பழக்கப்படுகின்றது.

மூன்றிலிருந்து 6 வயது வரையிலான மூன்று வருடகாலமும் பிள்ளைக்குப் படித்தல் என்பது ஒரு சுமையான பயத்தைத் தரக்கூடிய விடயம் என்றில்லாமல் - இயல்பாக, பயமில்லாமல், குழந்தைகள் விரும்பிப் பாடசாலைக்கு வருவதற்குத் தூண்டுகின்ற அதேநேரத்திலே பிள்ளைகளுக்கும் தேடலைத் தூண்டிவிடுகின்ற விதத்தில் இந்தக் கல்வி முறை அமைந் திருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

அதிலும் இந்த முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியை அல்லது ஆசிரியர்களுக்கும் தொடர்ச்சியான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, பிள்ளைகளுடனான அணுகுமுறையில் கூடிய அக்கறையும், கவனமும் எடுக்கும்படி பணிக்கப்படுகிறது.

டென்மார்க்கில் மூன்றாவது வயதில் முன்பள்ளியில் சேரும் ஒரு குழந்தை, ஆரம்ப வகுப்புக்குச் செல்லும் வரை ஒரே ஆசிரியையே தொடர்ச்சியாக 4 அல்லது 5 வருடங்கள் அந்தக் குழந்தை(கள்) படிக்கும் வகுப்பின் ஆசிரியராக இருப்பது வழக்கமாக இருக்கிறது.

குழந்தைக்கும், ஆசிரியருக்குமுள்ள உறவை நெருக்கமாக்கி, குழந்தையைப் படிப்பில் ஒரு ஈடுபாட்டைக் காணவைப்பதற்கு இந்த முறை கையாளப்படுகின்றது. பிரான்சிலே 1991 ஆம் ஆண்டு பாரிஸ் நகரத்திலுள்ள ஒரு முன்பள்ளிக்குள் துப்பாக்கி மற்றும் வெடி குண்டுகளுடன் ஒரு தீவிரவாதி புகுந்துவிட்டான்.

அந்த முன்பள்ளிக் கட்டடத்தின் முக்கிய பகுதிகளில் தன்னியக்க கருவிமூலம் வெடிக்கத்தக்கதாக வெடிகுண்டுகளைப் பொருத்தி - 28 குழந்தைகளையும், ஒரு ஆசிரியரையும், ஒரு உதவியாளரையும் பணயக் கைதிகளாகப் பிடித்துவிட்டான்.

5 கோடி பிரெஞ் பிராங் பணமும், ஒரு உலங்குவானூர்தியும் தனக்குத் தரவேண்டும் என்பது அவனது கோரிக்கையாக இருந்தது.

இந்தச் செய்தி அறிந்து பிரான்ஸ் மக்கள் அதிர்ச்சியடைந்தனர். அப்போது பிரெஞ்சு குடியரசுத் தலைவராக இருந்த காலஞ்சென்ற 'பிரான்சுவா மித்திரோன்' அந்த முன்பள்ளி வளாகத்துக்கு உடனடியாக விரைந்து சென்று, பதறித்துடித்துக்கொண்டிருந்த பெற்றோர்களுக்கு ஆறுதல் கூறினார்.

# உரிமைக்களம்

## பணியாளரின் கடமைகள்

உரிமைக்களத்தில் தேர்தல் விடயம் பற்றி அலசிவந்தாலும், தேர்தல் பணிகள் பற்றி கவனம் செலுத்துவது சிறப்பாக அமையும். ஏனெனில், தேர்தல் நெருங்கிவிட்டது. தேர்தல் கடமைக்கு யாழ். மாவட்டப் பணியாளர்கள் தயாராகி வருகிறார்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் பல விடயங்கள் சாதாரண மக்களிடம் கேள்வியாக எழுந்துள்ளது.

வாக்குகளைச் செலுத்த வருபவர்கள் தேர்தல் கடமையில் ஈடுபட்டிருப்பவர்களுடன் பேசமுடியாது என்பதைக் கேள்விப்பட்ட பலர் அதுபற்றி அறிய ஆவலாக உள்ளனர். யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் பணியாளர்கள் தமது பாதுகாப்பையும், தற்போதைய சூழலையும் கவனத்தில் கொண்டு பேசுவதைத் தவிர்க்க விரும்புகின்றனர்.

ஆனால், அடிப்படையில் வாக்காளர் வாக்குச்சீட்டொன்றைப் பெற்றுக்கொண்ட பின்னர் அவர் அதனை வாக்குப் பெட்டிக்குள் இடமுன்னர் அவ்வாக்காளரோடு கதைப்பதற்கு வேட்பாளர் ஒருவருக்கோ அல்லது வாக்கெடுப்பு நிலைய முகவர் ஒருவருக்கோ இடமளிக்கக்கூடாதென தேர்தல் விதி கூறுகின்றது.

அதேவேளை பார்வையற்ற, உடல்ரீதியில் ஊனமுற்ற வாக்காளருக்கு உதவி செய்யவெனத் தேர்தல் சட்டம் இடமளித்துள்ளது. இத்தகைய வாக்காளர் வாக்களிக்க முடியாதென வெளிப்படுத்திக் கேட்டுக்கொண்டால், தலைமை தாங்கும் அலுவலகர் வாக்கெடுப்பை நடத்துகின்ற தமது பணிக்குழுவினரில் ஒருவரின் முன்னிலையில் வாக்காளர் வேண்டிக்கொள்கின்ற முறையில் அந்த வாக்காளரின் வாக்குச் சீட்டை அடையாளமிட்டுக் கொடுத்தல் வேண்டும். இத்தகைய கோரிக்கை ஒன்றை முன்வைப்பதற்கு அவரின் படிப்பறிவின்மையாயின், அது கவனத்தில் எடுக்கக்கூடாது எனவும் கூறப்பட்டுள்ளது. அதேபோன்று இந்த வாக்காளருக்கு போக்குவரத்தைச் செய்வதற்கான அதிகாரமும் தெரிவத்தாட்சி அலுவலகருக்கு உண்டு.

அடுத்தது யாழ்ப்பாணத்தில் தேர்தல் தொகுதியில் கடந்த காலத்திலும், தற்போதும் கள்ளவாக்குப் பற்றி அதிக செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றது. கடந்த காலத்தில் சில வேட்பாளர்களே தமக்கு ஆயிரக்கணக்கில் வாக்குப் போட்டதாகவும், அதனைச் சில அடியாட்களைக் கொண்டு ஊக்குவிக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. தற்போது பிரபலமானநீண்ட அரசியல் அனுபவமுடைய ஒரு வேட்பாளர் கடிதத்திற்குள் காசு வைத்து அனுப்புவதாகவும், அவற்றுக்குரிய வாக்காளர்கள் இறந்துவிட்டதாகவும் அல்லது வெளிநாடு சென்றுவிட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இன்னோர் அரசியற் கட்சிக்காரர் - பெயர்களையும், விலாசத்தையும் பதிந்து வருகிறதாகவும், நான் வெற்றிபெற்றால் உங்களுக்கு அந்தவேலை, இந்தவேலை, மற்றவேலை எல்லாம் தருவதாக உத்தரவாதமளிக்கிறாராம். இந்தக் கட்சிக்காரரும், வேறு மாவட்டாங்களுக்கு காசு அனுப்பும் வேட்பாளரும் லீலைகள் புரிந்தவர்களாகவும் தெரியவந்திருக்கிறது.

இப்படியான சூழலில் அவர்கள் தேசியப் பார்வையில் பேசுவதாகவும் ஆனால், தமிழ் மக்கள் தூங்கிவிடுவது தமக்கு கவலையளிப்பதாகவும் கூறிவருகின்றனராம். எப்படிக் கள்ளவாக்கு நிகழப்போகிறதென்பதே இன்றுள்ள பணியாளருக்குரிய பிரச்சினையாகும். அதனால் கேட்டுவாங்கும் வாக்குச்சீட்டுக்கள் அதிகம் பயன்படுமென பணியாளர்கள் நம்புகின்றனர்.

மரணமடைந்த அல்லது உயிரோடிருக்கும் ஆள் ஒருவரின் வாக்கை ஆள் மாறாட்டம் செய்து - தபால் மூலமோ, நேரடியாகவோ வாக்களிப்பது குற்றமாகும். இத்தகைய நபர் வாக்குச்சீட்டொன்றைக் கோருவதும், வாக்களிக்க முயலும்போதும் அந்த வாக்காளரின் அடையாளம் தொடர்பாக ஐயமொன்றை வாக்கெடுப்பு நிலையத்திலுள்ள முதலாவது எழுதுநர் அல்லது நிலையத்திலுள்ள முகவர்களோ எழுப்ப முயன்றால், அத்தகைய சந்தர்ப்பத்தில் வாக்காளரை விசாரித்து, அவரது ஆளடையாளத்துக்குரிய விடயங்களைச் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலகர் அறிந்து கொள்ளமுடியும். அவ்வாறாயின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிக்குமாறு கோருவது தவறாக இல்லாதிருப்பினும், இத்தகைய அடையாள அட்டை காணப்படாத காரணத்தால், வாக்குச்சீட்டொன்றை வழங்காமலிருக்க தீர்மானிக்கக்கூடாது.

கள்ளத்தனமாக வாக்களிப்பதற்கே குறித்த ஆள் வருகை தந்துள்ளார் எனத் தெரிந்துகொள்வதற்குமுன், அவரை அடையாள அட்டையை எடுத்துவருமாறு வாக்களிப்பு நிலையத்தைவிட்டு வெளியே அனுப்பக்கூடாது.

இவ்வாறு வருகைதந்த ஒருவரை உண்மையான வாக்காளர் அல்ல எனத் தீர்மானிக்க முடியுமாயின், தலைமைதாங்கும் அலுவலர் அவருக்கு வாக்குச்சீட்டு வாழங்காது விடுவதுடன், மேலதிக விசாரணைக்காக உரிய படிவத்தில் தயாரிக்கப்பட்ட அறிக்கையோடு பொலிஸாரிடம் ஒப்படைக்க முடியும். எனவே, பணியாளருக்குக் கள்ளவாக்கைத் தடுக்கும் அதிகாரம் இல்லை என்று கூறிவிட முடியாது.

இலங்கையின் தேர்தல் சட்ட பக்கங்களில் காணப்படும் பலவீனம் போன்றதே இதுவும். இந்தியாவைப்போன்று இலங்கையிலும் தேர்தலுக்கென அடையாள அட்டை வழங்குதல் வேண்டும். ஆனால், யாழ். குடாநாட்டில் அடையாள அட்டை இல்லாத வாக்காளர் இருப்பது கடினம். எனவே, பணியாளர் பலமானவர்கள். பலமான பாதுகாப்பு உண்டு. அவர்களே தேர்தலை சுமூகமாகவும், நீதியாகவும் நடாத்த உதவுவதுடன் - பலத்துடனும், துணிச்சலுடனும் பணியாற்றுவது அவசியமானது.

க.ஐங்கரன்

# ஹமாஸ் அமைப்பிற்கு புதிய தலைவர் நியமனம்

ஹமாஸ் போராளிக் குழுவின் புதிய தலைவராக அப்டெல் அசிஷ் அல் ரன்சிரி தெரிவுசெய்யப்பட்டுள்ளார். காஸாவில் மக்கள் மத்தியில் செவ்வாய்க்கிழமை உரையாற்றும்போது, பலஸ்தீன மக்கள் ஒன்றிணைந்து இஸ்ரேலுக்கு எதிராக போராடவேண்டும் என தெரிவித்திருந்தார்.

இதேவேளை ஹமாஸ் போராளிக் குழுவினர் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள எத்தனிக்கலாம் என சந்தேகித்து, இஸ்ரேலிய படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் பலஸ்தீனர்களின் எல்லைப் பிரதேசமாக அமைந்துள்ள மேற்குக்கரைப் பிரதேசத்தில் முக்கிய இடங்கள் தடை செய்யப்பட்டு சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் இஸ்ரேலிய படையினர் 'கான் யுனிஷ்' என்ற பிரதேசத்திற்கு அருகில் அமைந்துள்ள அகதி முகாம் ஒன்றினுள் நேற்று பிரவேசித்து விசாரணைகள் மேற்கொண்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், யூதக் குடியிருப்புகள் அமைந்திருந்த பிரதேசம் ஒன்றில் முன்னர் அமைந்திருந்த பலஸ்தீனரின் பல வீடுகளை இஸ்ரேலிய படையினர் புல்டோசர்கள் மூலம் இடித்து தரைமட்டமாக்கியுள்ளனர். இதனால் 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அவ்விடத்திலிருந்து வெளியேறியுள்ளதாக மக்கள் தெரிவித்திருந்தார்கள்.



மேலும், இஸ்ரேலிய படையினரும், பலஸ்தீன குழுக்களும் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இஸ்ரேலிய கடற்படைக் கப்பல்கள் காஸா பிரதேசத்தில் முக்கிய இடங்களை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே ஹமாசின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட



'ரன்ரிசி' தொடர்பாக கருத்துத் தெரிவித்த இஸ்ரேல் அரசாங்கத்தின் பேச்சாளர் 'சுவி பஷ்ரெர்' ஹமாஸ் அமைப்பில் அதிதீவிரமான போக்குக்கொண்டவர் இவரென குறிப்பிடப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி நேற்றுமுன்தினம் யாசினின் கொலை தொடர்பான கேள்வியொன்றிக்கு பதில் தெரிவிக்கும்போது, பயங்கர வாதத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கு இஸ்ரேலுக்கு உரிமை உண்டெனவும், அதேநேரத்தில் அதனால் ஏற்படும் பின் விளைவுகளையும் தெரிந்துவைத்திருக்க வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார். மேலும் இஸ்ரேல் பலஸ்தீன பிரச்சினைக்கு - இரு நாடுகளாக இவை அமைவதற்கு தனது ஆதரவை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் நேற்றுமுன்தினம் மாலை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் 15 நிமிடங்கள்வரை "செயிக் யாசினின்" படுகொலை தொடர்பாக எதுவிதமான முடிவுகளும் எடுக்கப்படாத நிலையில் கூட்டம் முடிவடைந்திருந்தது. அத்துடன், பலஸ்தீனத்தின் செயல்களை கண்டிக்காது, பாதுகாப்புச் சபையில் எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் ஆதரவு வழங்கப் போவதில்லை என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளையில் ஐக்கிய நாடுகளின் பலஸ்தீன அவதானி நாசர் அல் இட்வா, ஆன்மிகத் தலைவர் 'யாசினின்' படுகொலையை, போர்க்காலத்து குற்றமாகவே கருதுவதாக தெரிவித்துள்ளார்.

ஆனால் ஐக்கிய நாடுகளின் இஸ்ரேலிய தூதுவர் 'டன் கிலமென்' பதிலளிக்கும்போது செயின் யாசின் முக்கியமான ஒரு பயங்கரவாதி எனவும், பலஸ்தீன, இஸ்ரேலிய சமாதான பேச்சுக்களுக்கு மிகப்பெரிய தடையாக செயல்பட்டிருந்தார் எனவும் தெரிவித்தார்.

## உலக நோக்கு

### பக்தாத்திலுள்ள விடுதிமீது றொக்கட் தாக்குதல்

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் பத்திரிகையாளர்களும், ஈராக்கின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்பவர்களும் தங்கியிருந்த செரரோன் விடுதி மீது ரொக்கட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் விடுதியின் 6 ஆவது மாடியின்மீது நிகழ்த்தப்பட்டுள்ளது.

செரரோன் விடுதி இந்தத் தாக்குதலில் புகை மண்டலமாக காட்சியளித்தபோதிலும், எவ்வித சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உல்லாசப் பிரயாணிகள் விடுதிகள் அமைந்துள்ள இந்தப் பிரதேசம் அமெரிக்கப் படையினரால் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டிருந்தன.

ஈராக்கின் தலைநகர் தொடர்ந்து ஏறிகணை குண்டு வீச்சுக்களினால் தாக் கப்பட்டுவருகின்றது. கடந்த மாதம் கார்க் குண்டுத் தாக்குதலில் 17 பேர்வரை கொல்லப்பட்டிருந்தனர்.

### பிரதமர் ரொனி பிளேயரின் லிபிய விஜயத்திற்கு எதிர்ப்பு

லொக்கர்பி விமானக்குண்டுத் தாக்குதலில் மரணமடைந்தவர்களின் உறவினர்கள் பிரித் தானிய பிரதமர் ரொனி பிளேயர் இன்று லிபியாவிற்கு மேற்கொள்கின்ற விஜயம் தொடர்பாக அதிருப்தி அடைந்துள்ளதாக பிரித்தானிய ரொறி கட்சியின் தலைவர் மைக்கல் ஹோவாட் தெரிவித்தார்.

லொக்கர்பி விமானக்குண்டுத் தாக்குதலை லிபியர்கள் மேற்கொண்டிருந்தமையும் இத் தாக்குதலில் 270 பிரயாணிகள் கொல்லப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதனிடையே, உறுதிப்படுத்தப்படாத அறிக்கைகளில் ரொனி பிளேயர் லிபியத் தலைவர் கேணல் கடாபியை இன்று சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயர் தனது விஜயத்தில் ரிறிபோலி விமானக் குண்டுத்தாக்குதலில் மரணமடைந்தவர்களின் ஞாபகார்த்த நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.


முதலாம் ஆண்டு நிறைவு நாளில்!
ஈரவிழிகளுடன் நாம்!

ஏங்களுக்காக 26 - 03 - 1949



தெய்வத்திற்காக 07 - 04 - 2003

திருமதி பவளராணி தளையசிங்கம்

ஆயிரம் உறவுகள் வந்து போகும்
அனைத்துமே அடுத்தநாள் மறந்து போகும்
உங்களில் நாம் கொண்ட உறவுதனை
எப்படி மறந்து நாம் வாழ்ந்திருப்போம்.

கணவன், மக்கள், மருமக்கள், பேரமக்கள்.

56/12 ஆத்திசூடி வீதி, கந்தர்மடம் மேற்கு, யாழ்ப்பாணம்.

(677)

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# ஹெல உறுமயவிற்கு பிரசாரம் செய்ய 30 பிக்குகள் கொழும்பு வருகின்றனர்!

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவிற்காக பிரசாரத்தில் ஈடுபடுவதற்கு வெளி நாடுகளில் தங்கியிருக்கும் 30 பௌத்த பிக்குகள் இலங்கை வரவுள்ளனர்.

அவுஸ்ரேலியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தங்கியிருக்கும் பௌத்த பிக்குகளே இன்னும் சில தினங்களில் இலங்கை வரவுள்ளனர். இவ்வாறு கொழும்பு வரும் இவர்கள் ஹென்றி பீரிஸ் மைதானத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் கட்சியின் இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த இறுதி பிரசாரக் கூட்டத்தில் 2 ஆயிரம் பௌத்த பிக்குகள் உட்பட 5 லட்சம் மக்கள் கலந்துகொள்ளவுள்ளதாக கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (01)

# 'மகாபொல' நிதி மோசடி தொடர்பான விசாரணைக்கு சந்திரிகா உத்தரவு!

(கொழும்பு)

மகாபொல நம்பிக்கை நிதியத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பாக உடன் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவிற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிதியத்தின் பணத்தைக் கையாளும் நடைமுறைகளிலும், அதன்மூலம் நடத்தப்படும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்புத் தொடர்பான விடயங்களிலும் மோசடி நிகழ்ந்துள்ளது. எனவே அவை தொடர்பான விசாரணைகளை நடத்தவேண்டுமென பிரதம நீதியரசர் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்தே, ஜனாதிபதி சந்திரிகா இந்தப் பணிப்புரையை பிரதம நீதியரசருக்கு விடுத்துள்ளார்.

இதன்படி 2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நிதியத்தின் அனைத்து அறிக்கைகளையும் பெறுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

நிதியத்தின் 300 கோடி ரூபாவிற்கும் அதிகமான தொகை தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருக்கும் விடயம் உண்மையாக இருந்தால் அந்தத் தொகையினை குறித்த தனியார் நிறுவனத்திடமிருந்து மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பிரதம நீதியரசருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை - மகாபொல நம்பிக்கை நிதிய உறுப்பினரான கலாநிதி விக்கிரம வீரசூரிய, இவ்வாறான மோசடிகள் எதுவும் இடம்பெறவில்லையென மறுத்துள்ளார்.

ஆனால், மோசடிகள் இடம்பெற்றது தொடர்பான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக புலமைப்பரிசில் பெறும் மாணவர்கள் தெரிவித்தனர்.

குறித்த 300 கோடி தொகை நஷனல் பெலட் கோப்ரேசன் என்ற கம்பனிக்கு வழங்கப்பட்டதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

# அரசாங்கப் பாடசாலைகளில் தகவல்தொழில்நுட்பப் பாடம்!

## விரைவில் அமுல்படுத்தப்படும்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்துறை தொடர்பான பாடத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த புதிய பாடத்திட்டம் நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் அமுல்படுத்தப்படவுள்ளது. இந்தப் பாடத்திட்டம் தரம் 10, தரம் 11 ஆகிய வகுப்புகளில் முதலில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பாடத்தினை போதிப்பதற்கான தகுதி வாய்ந்த ஆசிரியர்களை கல்வி அமைச்சு தெரிவு செய்யவுள்ளது.

தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கு குறுகியகாலப் பயிற்சி வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பேராதனை பல்கலை மாணவர்கள் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை நிவர்த்தி செய்து அமைதியை ஏற்படுத்தி மாணவர்களின் கல்வி உரிமையைப் பாதுகாக்க வேண்டுமெனக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள் பேராதனை பல்கலைக்கழகத்தை தரக்குறைவாக மதிப்பீடு செய்துள்ளனர் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 17 மாணவர்களுக்கு மார்ச் மாதம் முதல் வகுப்புகளில் கலந்து கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளமை நியாயமற்ற செயல் என மாணவர்கள் சுட்டிக்காட்டினர்.

# தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிபெற்றால் பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி எம்மிடம் மீளளிக்க வேண்டும்!

## பிரதமர் ரணில் கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிபெற்று ஆட்சியமைத்தால், ஜனாதிபதி சந்திரிகா மீளவும் பாதுகாப்பு அமைச்சைத் தரவேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது -

தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சை நான்தான் வைத்திருப்பேன் என ஜனாதிபதி பிடிவாதம் பிடிக்காமல் ஆட்சியமைக்கும் அரசிடம் அதனை ஒப்படைக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் தற்போது ஏற்பட்டுள்ள பிளவு அமைதி நடவடிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

கிழக்குப் பிரதேசத்தில் ஒரு பகுதியினுடைய கட்டுப்பாட்டை விடுதலைப் புலிகளின் தலைவர் இழந்திருக்கின்றபோதிலும், அவர் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இன்னமும் திடமான கருத்தோடுதான் இருக்கின்றார் என்பதை நான் நம்புகின்றேன் எனவும் அவர் கூறினார்.

# போட்டியிலிருந்து விலகினார் ஹெல உறுமய வேட்பாளர்!

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக திகாமடுல்ல மாவட்டத்தில் வேட்புமனுவைத் தாக்கல்செய்திருந்த ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த புத்த பிக்கு ஒருவர் போட்டியிலிருந்து விலகுவதாகத் தெரிவித்துள்ளார்.

சங்கைக்குரிய பம்பரபானே ஜீவாணந்த தேரர் என்பவரே இவ்வாறு போட்டியிலிருந்து விலகுவதான தனது கடிதத்தை மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரிடம், நேற்று கையளித்தார்.

அநுராதபுரத்தில் பௌத்த பிக்குகளுக்கிடையே ஏற்பட்டுள்ள பிளவு மற்றும் இந்தத் தேர்தலில் போட்டியிட ஹெல உறுமய எங்கிருந்து பணத்தைப்பெற்றது போன்ற சந்தேகம் தனக்கு ஏற்பட்டதாலேயே தான் போட்டியிலிருந்து விலகுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

### மீண்டுமொரு....

அமைக்கப்படும் அரசாங்கமானது விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி அவர்கள் உற்பத்திசெய்யும் விவசாயப் பொருட்களுக்கான சந்தை வலையமைப்புக்களை அபிவிருத்திசெய்ய முன்னுரிமை வழங்கும் எனத் தெரிவித்தார்.

### தேர்தல்...

தேர்தல் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றில் 756 சம்பவங்கள் சாதாரண குற்றங்களுடன் தொடர்புபட்டது என்றும், 201 சம்பவங்கள் தேர்தல் தொடர்பாக முறையிட்டப்பட்டுள்ளதாகவும் தேர்தல் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

### கிழக்கு...

உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஹெல்மெட் அணிந்துகொண்டு வந்த இரண்டு சந்தேக நபர்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரியவருகிறது.

மிக அருகிலிருந்து சிறு பிஸ்டல் மூலம் சுடப்பட்டபோதும் பேராசிரியர் திருச்செல்வம் தெய்வாதீனமாக உயிர் தப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### சிறுமியை...

தண்டனையை வழங்கி நீதிவான் தீர்ப்பளித்தார்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு குற்றவாளி ஒரு லட்சம் ரூபா நட்டஈடு வழங்கவேண்டும். அவ்வாறு நட்டஈட்டுத் தொகை வழங்கப்படாவிடின் மேலதிக ஒரு வருடகால கடூழிய சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டுமெனவும் நீதிவான் வரதராஜா தீர்ப்பளித்தார்.

### இராணுவ...

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மாணவி சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1601 திகதி: 23.03.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| U | 2 | 1 | 4 | 7 | 8 | 2 |







இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.